Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 171 02.02.2026 திங்கட்கிழமை
Chennai Volume: 01 Issue: 171 Monday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(2-02-2026)
விசுவாவசு ஆண்டு, தை-19
பிறை: தேய்பிறை
திதி
பிரதமை பின்னிரவு 3.37 வரை பிறகு துவிதியை.
நட்சத்திரம்:
ஆயில்யம் நள்ளிரவு 12.29 வரை பிறகு மகம்.
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி.
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.
சூலம் –கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி

மேஷம் ...................... ஜெயம்
ரிஷபம்...................... சிறப்பு
மிதுனம் ...................... சுகம்
கடகம்...................... உயர்வு
சிம்மம் ...................... நட்பு
கன்னி...................... அமைதி
துலாம் ...................... புகழ்
விருச்சிகம்.................. ஆதரவு
தனுசு...................... பெருமை
மகரம் ...................... சுபம்
கும்பம்...................... வரவு
மீனம்...................... போட்டி

## நிர்மலா சீதாராமனுக்கு ஜனாதிபதி வாழ்த்து



புதுடில்லி,பிப்.2:

*2026-27ம் நிதியாண்டுக்கான மத்திய அரசின் பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ள மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதனிடையே நிர்மலா சீதாராமனுக்கு, திரவுபதி முர்மு இனிப்பு ஊட்டி மகிழ்ந்தார்.*

*முன்னதாக ஜனாதிபதி மாளிகையில் திரவுபதி முர்முவை சந்தித்து நிர்மலா சீதாராமன் ஆசிபெற்றதுடன், பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள் குறித்து அவரிடம் விளக்கம் அளித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.*

## காஞ்சிப் பட்டு: 9 பட்ஜெட்டுகள், 9 கைத்தறி புடவைகள்

மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தமிழகத்தின் புகழ்பெற்ற காஞ்சிபுரம் கைத்தறி நெசவு பட்டுப் புடவையை அணிந்து வந்தார். தொடர்ந்து 9-வது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்த அவர், ஒவ்வொரு முறையும் நாட்டின் கைத்தறி பாரம்பரியத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புடவைகளை அணிந்து வருவது வழக்கம்.

நிர்மலா சீதாராமன் அடர் நிற கம்பளி சால்வையும், மஞ்சள் நிற ஸ்வெட்டரும் அணிந்திருந்தார். பட்டு மற்றும் நுணுக்கமான கைவினைத்திறனுக்காக புகழ்பெற்ற காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், இந்தியாவின் மிகவும் பிரசித்தி பெற்ற கைத்தறி நெசவுகளில் ஒன்றாகும்.







# தன்னிறைவு பெற்ற இந்தியாவே இலக்கு



2026-27 நிதியாண்டிற்கான மத்திய யூனியன் பட்ஜெட் இன்று மக்களவையில் தாக்கல் செய்தார். இது சுதந்திர இந்தியாவின் 88-வது பட்ஜெட் ஆகும். இந்தாண்டு தமிழகம், கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் வரும் சூழலில் இந்த பட்ஜெட்டில் அவற்றுக்கு சிறப்பு கவனம் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. இந்நிலையில் மத்திய பட்ஜெட்டை மக்களவையில் தாக்கல் செய்து நிர்மலா சீதாராமன் அதன் மீது உரையாற்றினார். பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அம்சங்கள்

* ஏப்ரல் 1 முதல் புதிய வருமான வரி சட்டம் அமலுக்கு வருகிறது.
* திருத்தப்பட்ட வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய டிசம்பரிலிருந்து மார்ச் வரை கால நீட்டிப்பு செய்யப்படுகிறது.
* வருமான வரி தாக்கல் செய்யும்போது பொய் கணக்கு காட்டினாலோ, தவறான தரவுகள் வழங்கினாலோ 100 சதவீதம் அபராதம் விதிக்கப்படும்
* வருமான வரி தாக்கல் தொடர்பான சிறிய குற்றங்களுக்கு கிரிமினல் வழக்கு கிடையாது.
* மோட்டார் வாகன விபத்துகளுக்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகைகளுக்கு வருமான வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.
* வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான அசையா சொத்து வரி குறைப்பு
* நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளை இணைக்கும் வகையில் புதிய தொழில் வழித்தடங்கள் அமைக்கப்படும்.
* காதி, கைத்தறி, கைவினைப் பொருட்களை வலுப்படுத்த 'மகாத்மா காந்தி கிராம் ஸ்வராஜ்' என்ற புதிய திட்டம் தொடங்கப்படும்.
* மாநிலங்களுடன் இணைந்து பிரத்யேக கெமிக்கல் பூங்கா அமைக்கப்படும்.
* பயோ பார்மா எனப்படும் உயிரி மருத்துவ திட்டங்களை ஊக்குவிக்க ரூ.10,000 கோடி ஒதுக்கீடு
* சிறு, குறு தொழில்களுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீடு
* பொதிகை மலையில் சுற்றுச்சுழலுக்கு உகந்த மலையேற்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்
* உலக சுகாதார நிறுவனத்தின் பாரம்பரிய மருந்துகள் ஆராய்ச்சி மையம் குஜராத் மாநிலம் ஜாம்நகரில் அமைக்கப்படும்
* 3 புதிய ஆயுர்வேத கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படும்
* வெளிநாடு வாழ் இந்தியர்கள் இனி இந்திய பங்குச்சந்தையில் முதலீடு செய்யலாம்
* மாவட்டந்தோறும் மாணவிகளுக்கான விடுதிகள் அமைக்கப்படும்
* இந்தியவில் அந்நிய முதலீடுகளை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்கள். 10 சதவீதம் ஆக உள்ள முதலீடு வரம்பு, 24 சதவீதம் ஆக அதிகரிக்கப்படுகிறது
* தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கலாச்சார மையம் அமைக்கப்படும்
* பழவேற்காட்டில் பறவைகளை கண்காணிக்க 3 புதிய கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்படும்
* பொதிகை மலை, இமாச்சல், ஜம்மு காஷ்மீரில் டிரக்கிங் சுற்றுலாவை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
* கடலோர பகுதிகளில் தேங்காய் சாகுபடியை ஊக்குவிக்க புதிய திட்டம் செயல்படுத்தப்படும். தென்னை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் பட்டுப்போன தென்னை மரங்களை நீக்கி புதிய மரங்கள் நட திட்டம்.



## பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கு 'செக்' வைத்த பட்ஜெட்!

மத்திய பட்ஜெட் அறிவிப்பால் இன்று பங்குச்சந்தைகள் எதிர்பாராத அளவுக்கு வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றன.

முந்தைய ஆண்டுகளில் இல்லாத வகையில் 2026-27 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் நேற்று, ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் பட்ஜெட்டை தாக்கல் செய்து உரையாற்றினார்.

வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை பங்குச்சந்தைகளுக்கு விடுமுறையாகும். ஆனால் இன்று பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதையொட்டி பங்குச்சந்தைகள் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

பட்ஜெட் அறிவிப்பால் பங்குச்சந்தைகள் ஏற்றம் பெறும் என்று நினைத்திருந்த நிலையில், அதற்கு நேர்மாறாக அமைந்துவிட்டது.

அதற்குக் காரணம் பங்குச்சந்தை தொடர்பான பங்குகள் பரிவர்த்தனை வரி(Securities Transaction Tax). பங்குச்சந்தைகளில் பங்குகளை வாங்கும்போதும் விற்கும்போதும் செலுத்தப்படும் வரி.

இந்த வரி விகிதத்தை உயர்த்தி மத்திய அமைச்சர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதாவது பங்குச் சந்தையில் நிலவும் அதிகப்படியான ஊக வணிகத்தைக் (Speculative Trading) கட்டுப்படுத்தும் நோக்கில், ஃபியூச்சர்ஸ் மற்றும் ஆப்ஷன்ஸ் (F&O) மீதான வரிகள் உயர்த்தப்படுவதாக அறிவித்துள்ளார்.

ஃபியூச்சர்ஸ் மீதான வரி 0.02%ல் இருந்து 0.05% ஆகவும், ஆப்ஷன்ஸ் பிரீமியம் மீதான வரி 0.1%ல் இருந்து 0.15% ஆகவும் உயர்த்தப்படுகிறது.



பெரும்பாலான பங்குச்சந்தை வர்த்தக நிறுவனங்கள், தரகர்கள் இதனால் பாதிக்கப்படும் சூழ்நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது. வரி அதிகமாகும்போது அவர்களுக்கான லாபம் குறையும் என்று சொல்லப்படுகிறது. எனினும் பங்குச்சந்தை வர்த்தகத்தில் உள்ள ஊக வணிகங்களை நீக்கவே கொண்டுவரப்பட்டுள்ளதாகப் பார்க்கப்படுகிறது.

நீண்ட காலத்திற்கு முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு பெரிதாக பாதிப்பு இருக்காது என்றும் அதேநேரத்தில் குறுகிய காலத்திற்கு பங்குகளை வாங்கி விற்பவர்களுக்கு இது சிரமமாக இருக்கும் என்றும் பங்குச்சந்தை நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இதன் எதிரொலியாகவே பங்குச்சந்தை இன்று கடும் சரிவைச் சந்தித்து வருகிறது.

இன்று பிற்பகல் மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் 1,000 புள்ளிகளுக்குக் கீழும் தேசிய பங்குச்சந்தை நிஃப்டி 400 புள்ளிகளுக்குக் கீழும் குறைந்து வர்த்தகமாகி வருகிறது.

மேலும் இந்திய பங்குச்சந்தைகளில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் இனி முதலீடு செய்யலாம் என்று இன்றைய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தை மாதம் மூன்றாம் வெள்ளி குத்துவிளக்கு பூஜை சிறப்பு வழிபாடு






**விழுப்புரம், பிப்.02:**

விழுப்புரம் மாவட்டம் அவலூர்பேட்டை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை மாதம் மூன்றாம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி ஆர்ய வைஸ்ய பெண்கள் குத்துவிளக்கு பூஜையும் செய்திருந்தார்கள் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# தை 3–ஆம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு







**திருவண்ணாமலை, பிப்.02:**

திருவண்ணாமலை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு தை மாதம் 3-ஆம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு கணேஷ் ஐயர் அவர்களால் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர்களால் அர்ச்சனைகள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியம் இசைக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. உற்சவர் தேரில் ஆலயம் மூன்று முறை வலம் வந்தது. பின்னர் உற்சவருக்கு ஊஞ்சல் உற்சவம் நடைபெற்றது.

அனைவரும் பாட்டுகள் பாடி மகா தீபாராதனையும் நடைபெற்றது. உபயதாரர் : விஜயகுமார் ஆசிரியர் (ஓய்வு ) குடும்பத்தினர்கள். ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் ஊஞ்சல் உற்சவம்



**தஞ்சாவூர், பிப்.02:**

தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (30.01.2026) ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை தாயாருக்கு திருமஞ்சனமும், திருவாதிரை முன்னிட்டு ராமானுஜர் திருமஞ்சனமும் மாலை 7 மணி அளவில் ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் பிரகார புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி:தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

# தான் படித்த பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி சேவைகள் செய்த தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா



**மானாமதுரை, பிப்.2:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ள தெ.புதுக்கோட்டை யில் தான் படித்த பள்ளி யிலேயே தலைமை ஆசிரி யராக பணியாற்றி ஓய்வு பெற்ற மாநில நல்லாசிரியர், தினமலர் லட்சிய ஆசிரியர் விருது பெற்ற தலைமை ஆசிரியர் சிவ குருநாதனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

தெ புதுக் கோட்டையில் எம். கே.என்., அரசு உதவி பழமை வாய்ந்த பெறும் நடுநிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. பள்ளியில் 50 வருடங் களுக்கு முன்பு ஆரம்பக் கல்வி படித்த மாணவரான சிவகுருநாதன் தொடர்ந்து மேல்படிப்பு படித்து ஆசி ரியராக பணியாற்றி வந்த நிலையில் 30 ஆண்டு களாக இப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியில் சேர்ந்தார். இவரது பணி நிறைவு விழா பள்ளி வளா கத்தில் நடை பெற்றது.

பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள், பள்ளி நிர்வாக கமிட்டி தலைவர், செயலாளர், பொருளாளர், கிராம மக்கள் மாணவர்கள் உறுப்பினர்கள், வாழ்த்து தெரிவித்து பரிசுகள்வழங்கினர். பள்ளிக்கு சொந்த நிதியில் இருந்து பள்ளி நிர்வாக வளர்ச்சிக்காக ரூபாய் ஒரு லட்சத்தை கமிட்டியிடம் அவர் வழங்கினார்.

இவர் பணிபுரியும் போது பள்ளி வளர்ச்சிக்காகவும், படிக்கும் மாணவ மாணவியர் கல்வி தரம் உயர்வுக்கு பல்வேறு செவைகள் செய்து உள்ளார்.

# தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில மாநாடு





**சிவகாசி, பிப்.02:**

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் 23வது மாநில மாநாடு சிவகாசி ஸ்ரீகாளீஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஜனவரி 30,31, பிப்ரவரி 1 என 3 நாட்கள் நடைபெற்று வருகிறது.

முதல் நாள் நிகழ்வில், வரவேற்புக் குழு தலைவர் பி.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டை, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் என்.ஓ. சுகபுத்ரா தொடங்கி வைத்தார்.

எழுத்தாளர் ச. தமிழ்செல்வன், கணித அறிவியல் விஞ்ஞானி ராமானுஜம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் கு. அரவிந்தன், அறிவியல் இயக்கத்தின் மூத்த நிர்வாகிகள் டி.தாமஸ் பிராங்கோ, பி.ராஜமாணிக்கம் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

இரண்டாம் நாள் பிரதிநிதிகள் மாநாடு மாநில தலைவர் த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.மாநில பொது செயலாளர் எம்.எஸ் முகமது பாதுஷா செயலறிக்கை வழங்கினார், மாநில பொருளாளர் எஸ். சுதாகர் வரவு செலவு அறிக்கை வாசித்தார்.

பின்பு, மாவட்ட வாரியாக அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டத்தின் சார்பாக, மாவட்டத் தலைவர் ஜெ.ஜே. லியோன் அறிக்கை மீது விவாதம் மேற்கொண்டார்.

தொடர்ந்து, மாநில கட்டிட நிதியாக ரூபாய் பத்தாயிரத்தை, மாவட்ட செயலாளர் ஜீவானந்தம், மாவட்ட நிர்வாகிகள் நவனீதகிருஷ்ணன், காந்தி, பாலமுருகன், சசிக்குமார், ஜெரோம், வின்சென்ட் வீரு, பிரியங்கா, செந்தில் ராம் போன்றோர் மாநில நிர்வாகிகளிடம் வழங்கினர். தொடர்ந்து, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மூன்றாம் நாள் நிகழ்வில் இராமநாதபுரம் மாவட்ட எழுத்தாளர் கு.காந்தியின் பேரலையின் சாட்சியம் என்ற நூலின் ஆங்கில மொழியாக்கம் தனுஷ்கோடி என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது.

தொடர்ந்து, மாநில பொதுக்குழு, செயற்குழு மற்றும் மாநில நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

மாநாட்டு நிகழ்வுகளை, அறிவியல் இயக்க மாநில நிர்வாகிகளுடன் இணைந்து விருதுநகர் மாவட்ட அறிவியல் இயக்க நிர்வாகிகள் செய்திருந்தனர்

# தைப்பூசத் திருநாள் வாழ்த்துகள்- விஜய்



**சென்னை, பிப்.02:**

தமிழகம் முழுவதும் இன்று தைப்பூசத் திருவிழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி முருகன் கோவில்களில் அதிகாலை முதல் நீண்ட வரிசையில் நின்று பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள செய்தியில்,

தமிழ்க் கடவுள் முருகப் பெருமானைப் போற்றி வணங்கும், உலகெங்கும் வாழும் தமிழ்ச் சொந்தங்கள் அனைவர் இல்லங்களிலும் வளம், மகிழ்ச்சி, வெற்றி ஆகியவை நிலைக்கட்டும்.

இனிய தைப்பூசத் திருநாள் நல்வாழ்த்துகள்! என்று கூறியுள்ளார்.

# கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் தண்டாயுதபாணி கருங்கல் சன்னதி நிலைக்கல் பூஜை பக்தர்கள் வழிபாடு







**சிவகங்கை, பிப் .02:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ளது கட்டிக் குளம். இங்குள்ள கருப்பனேந்தேல் மடம், மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி களின் முதல் ஜீவ ஒடுக்கம் ஆகும்.

இங்கு அவர் வாழ்ந்து பக்தர் களுக்கு பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தியும், விநாயகர், தண்டாயுதபாணி மற்றும் பள்ளி கொண்ட பெருமாள் போன்ற தெய்வங்களை அவரே பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வந்தார்.

கட்டிக்குளம் சூட்டுக் கோல் மாயாண்டி சுவா மிகளால் ஏற்படுத்தப்பட்ட கருப்பனேந்தல் மடத்தில் கடந்த ஆண்டு வைகாசி மாதம் விநாயகர் கோவில் கருங்கல் திருப்பணிகள் நிறைவடைந்தது.

மாயாண்டி சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தண்டாயுதபாணி சுவாமி கோவில் கருங்கல் திருப்பணி அமைப்பதற்கு வாஸ்து பூஜை தொடங்கி கருங்கல் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது .

தைப்பூசம் தினத்தில் தண்டாயுதபாணி சன்னதியில் கருங்கல் நிலை வைக்கும் பூஜைகள் நடைபெற்றது . தைப்பூசம் நட்சத்திரம் மற்றும் பௌர்ணமி சிறப்பு பூஜைகள் மற்றும் மகா சித்தர் சூட்டுக் மாயாண்டி சுவாமி கள் தவசாலையில் பதினாறு வகையான மூலிகைகள் அபிஷேகம் சிறப்பு பூஜை மற்றும் தண்டாயுதபாணிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது .

அதைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கருப்பனேந்தல் மடம் நிர்வாகம் சுவாமிகள் வழிபாடு பக்தர்கள் மற்றும் கைங்கர்ய தொண்டர்கள் செய்து இருந்தனர்.

# வாக்கு சேகரிப்பு





தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தேர்தல் வேட்பாளர் வழக்கறிஞர் பழனிச்சாமி, மயிலாடுதுறையில் நமது தமிழர் முன்னேற்றப் பேரவையின் தலைவர் வழக்கறிஞர் செள.சிவச்சந்திரன் அவர்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.

# கல்பாக்கம் அரசு போக்குவரத்துக் கழக பணிமனைக்கு விருது



**புதுப்பட்டினம், பிப்.02:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கல்பாக்கம் பணிமனைக்கு 2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த பராமரிப்புப் பணிக்கான விருது காஞ்சிபுரம் மண்டல தலைமை அலுவலகத்தில் குடியரசு தினத்தன்று வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பொதுமேலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். துணை மேலாளர் (வணிகம்) ஸ்ரீதர், தொழில்நுட்ப மேலாளர் தட்சணாமூர்த்தி, இயக்கம் பிரிவு மேலாளர் இளம்பரிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த விழாவில் 2025 ஆம் ஆண்டு கல்பாக்கம் பணிமனையில் சிறப்பான பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டதற்கான விருது மற்றும் சான்றிதழை பொதுமேலாளர் கிருஷ்ணமூர்த்தி கல்பாக்கம் பணிமனை கிளை மேலாளர் பி.பழனிக்கு வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

இதில் போக்குவரத்து துறை அதிகாரிகள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்

# முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை– முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்





**சென்னை, பிப்.02:**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

எளிமையின் உருவம் - விடுதலைப் போராட்ட வீரர்- முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை

உப்புச் சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு என இந்திய விடுதலைப் போராட்டத்தில் முழுமூச்சாக ஈடுபட்ட தலைசிறந்த காந்தியவாதியும், இந்தியா விடுதலையடைந்தபோது நம் மாநில முதலமைச்சராக இருந்த பெருமைக்குரியவருமான ஓமந்தூர் ராமசாமி ஐயா அவர்களின் பிறந்தநாள்.

சமூகநீதிச் சாதனையாளராகத் தந்தை பெரியாராலும் பேரறிஞர் அண்ணாவாலும் போற்றப்பட்ட அவருக்குச் சென்னை ஓமந்தூரார் மருத்துவக் கல்வி வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன் என கூறியுள்ளார்.

# Union Budget 2026: கவிதையில் கண்டனம் தெரிவித்த கமல்ஹாசன்!



**புதுடெல்லி, பிப்.02:**

கவிதை மூலம் மத்திய பட்ஜெட்டை சாடியுள்ளார்.

எந்த பட்ஜெட் என்றாலும் எங்களது வரிகள் பொருந்தும் போலிருக்கிறது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் 2026ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ச்சியாக 9ஆவது ஆண்டாக மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சாதனை படைத்துள்ளார். மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆளும் கட்சியினர் வரவேற்பும், எதிர்க்கட்சியினர் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வரிசையில், எம்.பி. கமல் ஹாசன் தனது பானியில் கவிதை மூலம் மத்திய பட்ஜெட்டை சாடியுள்ளார். இது குறித்த X தள பதிவில் அவர், "எனக்குத் தமிழ் கற்பித்த மூன்று ஆசிரியர்களுள் ஒருவர் கண்ணதாசன். அவர் இந்திய பட்ஜெட் எப்படி இருக்கும் என்பதை யூகித்து அன்றே பாடிவைத்தார்.


'பாட்டு ஒண்ணு பாடு தம்பி பசியக் கொஞ்சம் மறந்திருப்போம்.பாரதத்தின் தலைநகரில் தேடு தேடு வேலை தேடு தம்பி...பாரதத்தின் பெருமை தன்னைப் பாடு, பாடு சோறு எதுக்கு தம்பி!'

நான் ஆசிரியர்களிடமிருந்து ஊக்கம் பெறுகிறவன். பல மாமாங்கங்களுக்கு முன்பு ஒரு பட்ஜெட்டைக் கண்டு நானும் தமிழில் கவிதை புலம்பியது இத்தருணத்தில் நினைவிலாடுகிறது.

'கள்ளிச் செடி பசுவாகிப்
பால் சுரக்கும்
வேப்பம்பூத் தேனெடுக்கும்
பண வண்டு
வறுமைக் கதிர் அறுக்கக்
கானல் நீர் வாய்க்கால்கள்
கற்பனை அறுவடையில்
கனவு நெல் மணிகள்
தெருவோர ஜமீன்தார்கள்
வரி செலுத்த
பஞ்ச ராஜ்ஜியப் பரிபாலனம்
எங்கும் ஓங்கும்'

இந்தியாவைப் பொறுத்த வரை இந்த பட்ஜெட் என்றில்லை; எந்த பட்ஜெட் என்றாலும் எங்களது வரிகள் பொருந்தும் போலிருக்கிறது," என குறிப்பிட்டுள்ளார்.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER NOW
3 CALENDAR
RS.100
MANJALMART.COM
2026
9337501889
7789941009


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000
per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009

# கவிதை அரங்கம்!





தோல்விகள் உன்னை
தொடர்ந்தாலும் உந்தன்
தோள் மேலே
அமர்ந்தாலும்
அவற்றை தோழனாக
ஏற்றுக்கொள்

வெற்றிக்கும் தோல்விக்கும்
சிறு வித்தியாசம்தான்
கடமையை செய்தல்
வெற்றி கடமைக்கு
செய்தல் தோல்வி

நிகழ்காலத்தில்
நல்லவிதமாக
செயல்பட்டால் உங்கள்
வருங்காலம் தன்னால்
மலரும்

முடிவுகளை தயங்காமல்
எடுக்கும் திறன் இருந்தால்
முன்னேற்றத்துக்கான
வாசல் எப்போதும்
திறந்தே இருக்கும்

# வாழ்க்கை தத்துவம்...



தடைகள் வந்து நின்றால்
அது முன்னேறுவதற்கான
சோதனை

மழையில்லா வாழ்கையின்
மதிப்பை தெரிந்துகொள்ள
காற்றின் தாக்கம் போதும்

முன்னேறும் பாதையில்
தடைகள் வருவது வழக்கம்
ஆனாலும் நின்றுவிடுவது தோல்வி

காற்று எப்படி வீசுகிறதோ
அதே போலவே
வாழ்க்கையும் நம்மை
இழுத்துச் செல்லும்

கடினமான நாட்கள்
வாழ்க்கையில் தேவை
அதில்தான் மனசு உருமாறும்

# வெங்கி – சங்கி !

முகத்தில் சோகம் அப்பிட வீட்டுக்குள் நுழைந்த வெங்கி என்கிற வெங்கடேசனைக் கண்டதும் நெற்றி சுருக் கினார் சங்கி என்கிற சங்கரன். வெங்கியை விட மூத்தவர் சங்கி. அதனால் அவர் வெங்கியிடம் ஒருமையில் பேசுவார். வெங்கியும் இதை பெரிசாக எடுத்துக் கொள்ள மாட்டார்.

" டேய் ! என்னடா என்னவோப்போல இருக்குற ! உன்னோட பங்காளி யாராவது புட்டுக்கிட்டாங்களா ?" என்றார் சங்கி. அவர் பேச்சில் நய்யாண்டித்தனம் வழக்கம் போல் இருந்த்து !

" இல்லண்ணே ! நம்ம தோஸ்த் ஒருத்தர்நாட்டுக்காக தன் உயிரையே தியாகம் பண்ணிட்டாரு !"

" அப்படியா ! யார்ரா அது ?"
" நம்ம சுப்பு அண்ணே !"

" எப்போப் பார்த்தாலும் தண்ணி அடிச்சிட்டு விழுந்து கிடப்பானே ! அவனா?"

" அண்ணே ! அவர்தான்...அவர் எப்படி உயிரை விட்டார்னு தெரிஞ்சா நீங்கக் கூட வருத்தப்படுவீங்க !"
" அப்படியா..சொல்லு ராஜா !"

" அண்ணே ! கொஞ்ச நாள் முன்னாடி பாகிஸ்தான் தீவிரவாதீங்க நம்ம நாட்டு ராணுவ வீரர்கள் 40 பேரை படுகொ லை பண்ணாங்க இல் லையா ?"

" ஆமாம் !"

" அந்த நியூஸ கேட்ட நம்ம சுப்பு அதிர்ச்சியில அப்படியே நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு சாய்ஞ்சவர்தான். அதுக்கப்புறம் எழுந்திருக்கவே இல்ல."

" அதுக்கு !"

" அது தியாகமில்லையா ?"

" படவா..ராஸ்கல் ! வயிரு முட்ட குடிச்சு ஹார்ட் வெடிச்சு செத்தான். அவனப் போய் தியாகிங்குறயே ! ...அது சரி. எப்படிடா இந்த மாதிரியெல்லாம் ஐடியா தோணுது ?"

" அண்ணே ! அதுக்கு நடு மூளை வேணும்!"

" என்னது நடுமூளையா ?"

" ஆமா.. பெருமூளைக்கும்சிறுமூளைக்கும் நடுவுல இருக்குற மூளை. உலக த்திலேயே என்கிட்ட மட்டும்தான் இருக்கு !"

" நைனா ! இப்படியே வெளியில போய் சொல்லிடாதே. அப்புறம் நடு முதுகில நாலு சாத்து சாத்துவாங்க !"

" அதை விடுங்கண்ணே ! ஒரு விஷயம உங்கக் கிட்ட கன்ஃபர்ம் பண்ணலாம்னு வந்தேன்."

" சரிதான் ஏதோ விவகாரமாதான் வந்திருக்கேன்னு தெரியுது ! கேளு ராஜா !"

" அண்ணே ! அபிமன்யு பத்தி ஏதாவது விஷயம் தெரிஞ்சுதா?"

" யார்ரா அது ?"

" அதாண்ணே ! ரிங் மாஸ்டர் !"

" என்னது..ரிங் மாஸ்டரா ?"

" ஆமாண்ணே ! பாகிஸ்தான் ராணுவத்திடம் மாட்டிக்கிட்டாரே..."

" அடப்பாவி ! ரிங்மாஸ்டரா டேய்..அவர் விங் கமாண்டர்டா. அவர் பேர் அபின ந்தன். இப்படி எக்குத் தப்பா பேசுறே !"

" அண்ணே ! என் வாயில வரமாதி ரிதான் என்னால பேச முடியும் ! "

" டேய் ! முதல்ல உன் வாயை நல்லா டெட்டால் போட்டு கழுவு . அப்பதான் உருப்படுவே !"

" அத விடுங்கண்ணே ! அவர் எப்படி பாகிஸ்தான்ல போய் மாட்டினாரு ?"

" அதுவா...வந்து... பாகிஸ்தான் எல்லைக்குள்ளாற பறந்துபோய் அவங்க விமானத்த தாக்கியிருக்காரு. பதிலுக்குஅவங்கஅபிமன்யு... சாரி..அபினந்தன் பிளேனசுட்டுட்டாங்க. உடனே தப்பிக்க கீழே குதிச்சிரு க்காரு. பாகிஸ்தான் ராணுவம் கிட்ட மாட்டிக்கிட்டாரு..."

" அடடா ! குதிச்சதுதான் குதிச்சாரே ! நம்ம இந்திய எல்லைக்குள்ளாற குதிச்சிருக்கக் கூடாது !"

" இவ்வளவு வக்கரணையா பேசறயே ! நீ போய் பாரு தெரியும் !"

" அண்ணே ! மட்டமா பேசாதீங்க ! எங்க தாத்தா பிரிகேடியர். சைனா வார்ல பிரமாதமா பங்கெடுத்துக்கிட் டிருக்காரு.."

" என்ன உங்கத் தாத்தா கேடியா ?" வார்ல கொக்கு சுட்டாரா ?"

" எங்கப்பா கேப்டன் பல்ராம் !"

" உங்கப்பா என்ன , சப்பாத்தி சுட்டாரா?"

" அவங்களோட வாரிசு நான் ! நான் மட்டும் பங்கெடுத்துக்கிட்டா பாகிஸ் தான் தீவிரவாதிங்க அத்தனை பேரை யும் பாம் போட்டு அழிச்சிடுவேன்...."

" எது..ஜன்டோ பாமா ?"

" இல்லேன்னா ஜே.கே 47 மெஷின் கன்னால அத்தனைபேரையும் பட் பட்டுன்னு ஷூட் பண்ணிடுவேன் !"

" என்னது ஜே.கே 47 கன்னா... படுவா உன்ன என்ன செய்யறேன் பாரு !" சங்கிதடியை எடுப்பதற்குள் மாயமாய் மறைந்து விடுகிறார் வெங்கி.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*மிருகக் காட்சி சாலையில் புலி ஒன்று, பார்வையாளரில் ஒருவனைக் கொன்றுவிட்டது. அதைக் கண்டு பக்கத்து கூண்டில் இருந்த எலி கேட்டது. எதுக்கு அவனைக் கொன்னேனு...*

*புலி : அந்தப் பரதேசி நாய் மூணு மணி நேரமா என்னைப் பார்த்துச் சொல்றான் "எவ்ளோ பெரிய பூனை"ன்னு.*



# தினம் ஒரு சமையல்



## சுரைக்காய் அடை

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| உலர்ந்த தேங்காய் | - 1 கப் |
| முழு உளுத்தம் பருப்பு | - ½ கப் |
| கடலைப்பருப்பு | - 2 டேபிள்ஸ்பூன் |
| வர மிளகாய் | - 10 |
| காஷ்மீரி சிவப்பு மிளகாய் | - 6 |
| புளி | - 1 டீஸ்பூன் |
| பெருங்காயம் | - 1 டீஸ்பூன் |
| பூண்டு பல் | - 6 |
| உப்பு | - தேவையான அளவு |
| தேங்காய் எண்ணெய் | - 1 டேபிள் ஸ்பூன் |

**செய்முறை:**



முதலில் அரை ஸ்பூன் தேங்காய் எண்ணெயை ஒரு கடாயில் ஊற்றி சூடாக்கவும். எண்ணெய் சூடானதும் அதில் ½ கப் முழு உளுத்தம் பருப்பு, 2 டேபிள்ஸ்பூன் கடலைப்பருப்பு, 10 வர மிளகாய் மற்றும் 6 காஷ்மீரி மிளகாய்களைச் சேர்த்து பொன்னிறமாகும் வரை வறுக்கவும், இதை ஒரு தட்டிற்கு மாற்றி தனியாக வைக்கவும்.

அதே கடாயில் மீதமுள்ள எண்ணெயைச் சேர்த்து, 1 கப் தேங்காயை சேர்த்து பொன்னிறமாகும் வரை வறுத்து இதையும் தனியாக வைக்கவும்.

பின் பூண்டு பற்களை சேர்த்து வறுத்து தனியாக வைக்கவும்.

இப்போது 1 டீஸ்பூன் புளியைச் சேர்த்து ஒரு நிமிடம் வறுக்கவும், பின்னர் உப்பு மற்றும் பெருங்காயம் சேர்த்து வதக்கி தனியாக எடுத்து வைத்து விட்டு அடுப்பை அணைக்கவும்.

அனைத்தும் ஆறும் வரை காத்திருக்கவும்.

அனைத்தும் ஆறியவுடன் அவற்றை ஒரு மிக்சி ஜாருக்கு மாற்றவும்.

பின்னர் தண்ணீர் சேர்க்காமல் கொரகொரப்பாக அரைக்கவும்.

இதை ஒரு தட்டுக்கு மாற்றி ஆறியவுடன் ஒரு காற்றுப்புகாத பாத்திரத்துக்கு மாற்றவும்.

இதை சூடான தோசையுடன் வைத்து சிறிது நல்லெண்ணெய் ஊற்றி சாப்பிட்டால் சுவை அருமையாக இருக்கும்.

# பெருங்காயம் பயன்கள்



பெருங்காயம் (ASAFOETIDA) செரிமானத்தை மேம்படுத்தி, வாய்வுத் தொல்லை, வயிற்று உப்புசம் மற்றும் மலச்சிக்கலை குணப்படுத்தும் மிகச்சிறந்த மருத்துவ குணம் கொண்ட நறுமணப் பொருள். இது கெட்ட கொழுப்பைக் கட்டுப்படுத்தி, சளி மற்றும் இருமலைக் குறைக்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. பருப்பு மற்றும் அசைவ உணவுகளில் சேர்ப்பதன் மூலம் செரிமானத்தை சீராக்கி ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

பெருங்காயத்தின் முக்கிய பயன்கள்:

செரிமான மேம்பாடு: வயிற்று உப்புசம், வாய்வுத் தொல்லை (GAS PROBLEM), மற்றும் அஜீரணக் கோளாறுகளைக் குணப்படுத்துகிறது.

வயிற்றுப் புழுக்கள்: குழந்தைகளுக்கு வயிற்றுப் புழுக்கள் இருந்தால், பெருங்காயத்தை மோரில் கலந்து கொடுக்க குணமாகும்.

மாதவிடாய் வலி: பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் வலி, வயிற்றுப்பிடிப்பு மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய் பிரச்சினைகளைச் சரிசெய்ய உதவுகிறது.

சளி மற்றும் இருமல்: மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் கபம் போன்றவற்றைக் குறைக்க, பெருங்காயத்தை தேன் அல்லது தண்ணீருடன் கலந்து பயன்படுத்தலாம்.

எடை இழப்பு: வளர்சிதை மாற்றத்தை (METABOLISM) அதிகரித்து, தேவையற்ற கொழுப்பைக் குறைக்க உதவும்.


வலி நிவாரணி: பல் வலி உள்ள இடத்திலோ அல்லது வயிற்று வலிக்கும் இடத்திலோ பெருங்காயத்தை நீர்விட்டு அரைத்துப் பூசினால் வலி குறையும்.

பயன்படுத்தும் முறை:

சாம்பார், ரசம், மோர் மற்றும் பருப்பு உணவுகளில் சமைக்கும்போது ஒரு சிட்டிகை சேர்த்தால் போதுமானது.

வெறும் வயிற்றில் ஒரு சிட்டிகை பெருங்காயத்தை வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிப்பது செரிமானத்திற்கு மிகவும் நல்லது.

எண்ணெயில் லேசாக வறுத்து பயன்படுத்துவது சிறந்த பலனைத் தரும்.




# விஜய்யால் அது தான் ஒரே பாதிப்பு.. குஷ்பு சொன்ன விஷயம்




நடிகர் விஜய் அரசியல் கட்சி தொடங்கி தீவிர அரசியலில் களமிறங்கி இருக்கும் நிலையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எல்லாம் அவரை பற்றி தான் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக விஜய்யை தாக்கி தான் திமுக மற்றும் பாஜக ஆகிய கட்சிகள் பேசி வருகின்றனர். இந்நிலையில் விஜய் பற்றி பாஜகவை சேர்ந்த நடிகை குஷ்பு ஒரு விஷயம் பேசி இருக்கிறார்.

விஜய்யை நான் அரசியல்வாதியாக பார்க்கவில்லை. அவரால் எங்கள் கூட்டணிக்கு எந்த பாதிப்பும் இல்லை. அவரை நான் தம்பியாக தான் பார்க்கிறேன். அவர் சினிமாவில் இருந்து விலகுவது மட்டும் தான் ஒரே பாதிப்பு. அவர் எங்கே இருந்தாலும் என் வாழ்த்துக்கள் என குஷ்பு பேசி இருக்கிறார்.




நடிகை தமன்னா க்ளாமராக பாடலுக்கு நடனம் ஆடினால் அந்த பாடல் இந்தியா முழுவதும் வைரல் ஹிட் ஆகிவிடுகிறது. தற்போது கைவசம் ஏராளமான படங்களை அவர் வைத்து இருக்கிறார்.

# ஜீ.வி.பிரகாஷ் சாருக்கு நன்றி.. சைந்தவி போட்ட பதிவு




இசையமைப்பாளரும் நடிகருமான ஜீ.வி.பிரகாஷ் மற்றும் பாடகி சைந்தவி இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டு 12 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த நிலையில் கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்து செய்வதாக அறிவித்தனர்.

கடந்த வருடம் அவர்கள் சட்டப்படி நீதிமன்றம் மூலமாக விவாகரத்து பெற்றுவிட்டனர். அவர்கள் பிரிந்துவிட்டாலும் ஜீ.வி. பிரகாஷ் நடத்தும் இசை கச்சேரிகளில் சைந்தவியும் கலந்துகொண்டு பாடல்கள் பாடி வருகிறார். அது பலரும் ஆச்சர்யம் அளிக்கும் ஒன்றாக இருக்கிறது.

இந்நிலையில் அசுரன் படத்தில் வரும் 'எள்ளு வய பூக்கலையே' பாடலுக்காக சைந்தவிக்கு மாநில அரசு விருது அறிவித்து இருக்கிறது.

அதற்காக நன்றி தெரிவித்து பதிவிட்டு இருக்கும் சைந்தவி 'என்னை நம்பிய ஜீ.வி.பிரகாஷ் சாருக்கு நன்றி' என குறிப்பிட்டு இருக்கிறார்.

அசுரன் படம் உருவான போது ஜீ.வி மற்றும் சைந்தவி இருவரும் ஒன்றாக தான் வாழ்த்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தைப்பூசம் ஸ்பெஷல்




**சிறப்பு வாய்ந்த தைப்பூசம்**

நம் எல்லோருமே தைப்பூசம் என்றால் முருகப் பெருமான் பார்வதி தேவியிடம் வேல் வாங்கி ய சிறப்பு தினம் என்றும், முருகப்பெருமானுக்கு இந்த விசேஷ நாளில் வழிப்பட்டால் முருகனின் ஆசி கிடைக்கும் என்று வணங்கி வருகிறோம்.

ஆனால் உண்மையில் இந்த நந்நாளில் முருகப்பெருமானுக்கு மட்டுமின்றி, ஏராளமான கடவுள்களுக்கும் இது ஒரு சிறப்பு வாய்ந்த நாள் என்று நம்மில் பலருக்கும் தெரியாது. தைப்பூசத்தின் சிறப்புகள் என்னென்ன என்று இந்த பதிவில் பார்க்கலாம்!

**சிறப்புகள் வாய்ந்த தைப்பூச தினம்:**

தை மாதத்தில் வரும் பௌர்ணமியும், பூச நட்சத்திரமும் ஒன்று சேரும் இந்த நன்னாள் தான் தைப்பூச தினமாக வழிபடப்படுகிறது. தைப்பூசம் என்பது முருக பெருமானுக்குரிய விரத நாளாக மட்டுமே கருதப்படுகிறது.

ஆனால் இது முருக வழிபாட்டிற்கு மட்டு மின்றி சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, குரு வழிபாட்டிற்கும் மிகவும் உகந்தது ஆகும். அதனால் தைப்பூச நாளில் எந்த தெய்வத்தை வழிபட்டால் அளவில்லாத பலன் கிடைக்கும். அனைத்து தெய்வங்களுக்கும் உரியதாக சொல்லப்படும் அளவிற்கு இந்த தை மாத பூசம் நட்சத்திரம் மற்றும் பௌர்ணமி திதி இணைந்து வரும் நாளுக்கு அப்படி என்ன தனிச்சிறப்பு என்பதை வாங்க தெரிந்து கொள்ளலாம்.

**உலகமெங்கும் கொண்டாடப்படும் தைப்பூசம்**

இந்தியாவில் மட்டுமின்றி இலங்கை, சிங்கப் பூர், மலேசியா, மொரிசியஸ் நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. தைப்பூசம் தினத்தன் று எல்லா முருகன் தலங்களிலும் முருகப் பெருமான் வீதி உலா வருவார்.

பவுர்ணமி தினத்தன்று முழு நிலவு சமயத்தில் பூசம் நட்சத்திரம் வரும்போது சிறப்பு வழிபாடுகள் செய்வதே தைப்பூசத்தின் முக்கிய நிகழ்வாகும். தைப்பூசத்தன்று முருகன் நரகாசுரனை வதம் செய்த நிகழ்வு ஒரு சிறப்பு விழாவாக இன்றும் பழனியில் கொண்டாடப்படுகிறது.

**முருகன் பார்வதி தேவியிடம் வேல் பெற்ற நாள்:**

அசுரர்களுடன் போரிட தலைமை தாங்கி செல்லக்கூடிய சக்தி வாய்ந்த தலைவன் தேவை என ஈசனிடம் வேண்டினர்.

கருணைக்கடலான எம்பெருமான், தன் தனிப்பட்ட சக்தியிலிருந்து, நெற்றிக் கண்ணிலிருந்து உருவானவர் தான் கந்தன். நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகள் ஆறு அழகிய குழந்தைகளாகின. அந்த குழந்தைகளை கார்த்திகை பெண்கள் வளர்த்தனர்.

பின்னர் ஆறுமுகமாக உருவெடுத்தார். ஆண்டி கோலத்தில் பழனி மலை மீது நின்றிருக்கும் முருகனுக்கு, அன்னை பராசக்தி தன் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி ஞான வேல் வழங்கியது இந்த தைப்பூச திருநாளில் தான் என புராணங்கள் சொல்கின்றன.

**வள்ளலார் ஜோதி வடிவில் காட்சி தந்த தினம்:**

வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் ஒரு தை மாத வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தி ல்தான் சமாதியானார். இதை குறிக்கும் விதமாக அவர் சமாதியான வடலூரில், தைப்பூச நாளில் லட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண்டாடுகிறார்கள். வடலூரில் தை மாதத்தில் தைப்பூச நாளில் பிரம்மஞான சபையில் அதிகாலை ஏழு திரை விலக்கி ஜோதி தரிசனம் நடைபெறுகிறது. வள்ளலார் ராமலிங்க அடிகளார் தைப்பூச திருநாளிலேயே ஸித்தி அடைந்ததாக சொல்லப்படுகிறது.



**வேறு என்னவெல்லாம் சிறப்புகள்:**

தைப்பூச திருநாளில் தான் உலகில் முதன்முதலாக நீரும், நீரில் இருந்து பிற ஜீவா ராசிகளும் தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன.

முருகப்பெருமான் வள்ளி பிராட்டியை தைப்பூச நன்னாளில் தான் திருமணம் செய்து கொண்டராம்.

திருச்சி ஸ்ரீரங்கத்தில் வீற்றிருக்கும் அரங்கநாதர் காவிரி கரையோரம் குடிகொண்டிருக்கும் தன் தங்கையான சமயபுரம் மாரியம்மனுக்கு சீர் கொடுத்த நாளும் இந்த தைப்பூச தினம் தான்.

நெல்லையில் உள்ள தாமிரபரணி நதிக்கரையில் நெல்லையப்பரை நினைத்து விரதமிருந்த காந்திமதி அம்மன், தைப்பூச தினத்தில் நெல்லையப்பரின் அருளைப் பெற்றார்.

காவிரி தாய் ஸ்ரீரங்கம் அரங்கநாதரை நினைத்து தீவிர தவத்தில் இருந்ததனா ல், நாராயண பெருமான் காவிரி தாயின் தவத்தை மெச்சி தரிசனம் வழங்கியதும் இந்த நந்நாளில் தான்.

முருகப்பெருமான் நரகாசுரனை வதம் செய்த நாளை நினைத்து இன்று பழனியில் முருக பகதர்கள், காவடி எடுத்து கொண்டாடுகின்றனர்.

வாயு பகவானும் , வர்ண பகவானும், அக்கினி பகவானும் ஈசனின் அதீத சக்தியை உணர்ந்த நாளாகவும் இந்நாள் போற்றப்படுகிறது. அதாவது இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியாக இறைவனே இருக்கிறான் என்பது உணர்த்தப்பட்ட புண்ணியநாள், தைப்பூச நன்னாளாகும்.

தைப்பூச நன்னாளில்தான் ஞானசம்பந்தர் மயிலாப்பூரில் பாம்பு கடித்து இறந்து போன பூம்பாவை என்ற பெண்ணின் அஸ்தி கலசத்தில் இருந்து அப்பெண்ணை உயிருடன் எழுந்து வரும் படி பதிகம் பாடி, உயிர்ப்பித்தார். இது மயிலை கபாலீஸ்வரர் ஆலயத் தில்தான் நடந்தது. இதை மயிலைப்புராணம் கூறுகிறது. இச்சன்னதி மயிலை கபாலீஸ்வரர் ஆலயத்தில் கொடி மரம் அருகே உள்ளது.

தில்லை நடராசருக்கும் இந்தப் பூச நன்னாள் உகந்தது. இவர் பார்வதியுடன் நடத்திய ஆனந்த நடனத்தை தில்லை சிதம்பரத்தில், பதஞ்சலி முனிவர் (ஆதிசேஷ அம்சம்) வியாக்ர பாதர் (புலிக்கால் முனிவர், ஜைன முனிவர்) இவர்களும் தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்த தைப்பூச நன்னாளில்தான் ஆனந்த நடனம் கண்டு களித்தனர்.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த இந்த நந்நாளில் நீங்கள் முருகன் கோயில்கள் மட்டுமின்றி, சிவன், பெருமாள் என ஏனையக் கோயில்களுக்கும் சென்று வழிபடலாம்.

வெற்றிவேல்முருகனுக்கு அரோகரா

-முனைவர்
இராம.வேதநாயகம்



**தினம் ஒரு தலைவர்கள்**

# தாந்தியா தோபே வரலாறு

தாந்தியா தோப், 1857 தாந்தியா தோபே இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து ஜான்சி ராணி லட்சுமி பாய்க்கு பெரிதும் உதவியவர். இவரது இயற்பெயர் இராமசந்திர பாண்டுரங்கா.. இரண்டாம் பாஜிராவின் குடும்பத்தைச் சேர்ந்தவரின் மகன்.. பித்தூர் நாட்டின் நானா சாகிப்பின் நெருங்கிய நண்பர்.


சிலம்பம், துப்பாக்கிச் சுடுதல் ஆகியவற்றில் பயிற்சி பெற்றவர். முறையான இராணுவப் பயிற்சி இல்லாவிடிலும் கொரில்லாப் போர் முறையில் போரிட்டு, எந்த நெருக்கடியையும் சமாளித்துத் தப்பிவிடக்கூடியவர். 1857 இல் நடந்த சிப்பாய் கலகத்தை மத்திய இந்தியாவில் மிகச் சிறப்பாக செயல்படுத்தி ஆங்கிலேயருக்கு மிகுந்த துன்பம் கொடுத்தவர்.

ஜான்சி ராணிக்கு பெரிதும் துணை இருந்தவர். 1857 இல் இருந்து 1859 வரை பல இந்திய மன்னர்களுடன் சேர்ந்து பல இடங்களில் போராடியவர்.

ஆங்கிலேயரால் சிறைபிடிக்கப்பட்ட இவருக்கு இராணுவ நீதி மன்றம் 1859 ஏப்ரல் 15 இல் தூக்கு தண்டனை விதித்தது. தாம் மன்னிப்பு கேட்கப்போவதில்லை என்றும் தாம் தமது மன்னரின் ஆணையின்படி செயல்பட்டதாகவும் கூறி, சங்கிலியால் கை, கால்கள் பிணைக்கப்பட்டிருந்த நிலையிலும் தூக்குக் கயிற்றைத் தாமே கழுத்தில் மாட்டிக் கொண்டார். 1859 ஏப்ரல் 17 அன்று தளபதி தாந்தியா தோபே தூக்கிலிடப்பட்டார்.

வரலாறு
தந்தியா தோபே 1857 ஆம் ஆண்டு இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சியில் ஒரு தளபதியாக இருந்தார் மற்றும் அதன் குறிப்பிடத்தக்க தலைவர்களில் ஒருவராக இருந்தார். அவர் ஒரு மராத்தி தேசஸ்த பிராமண குடும்பத்தில் பிறந்தார், மேலும் கட்டளை அதிகாரி என்று பொருள்படும் தோபே என்ற பட்டத்தைப் பெற்றார். தோபே என்றால் தலைவர் என்று பொருள்படும். பிதூரின் நானா சாகிப்பின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார், அவருடன் குவாலியர் நகரத்தையும் கைப்பற்றினார். இருப்பினும், ஜெனரல் நேப்பியரின் பிரித்தானிய இந்திய துருப்புக்கள் ரனோத் என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர், மேலும் சிகாரில் மேலும் தோல்வியடைந்த பின்னர் முற்றுகையை கைவிட்டார்.

ஒரு அதிகாரபூர்வமாக, தந்தியா தொபேயின் தந்தை பாண்டுரங்கன் இன்றைய மகாராட்டிராவில் உள்ள படோடா சில்லா நகரில் வசிக்கும் ஜோலா பர்கண்ணா என்பவர்களின் முன்னோர்ராவார். தோபே பிறப்பால் ஒரு மகராட்டிர வசிஷ்ட பிராமணர் ஆவார். அரசாங்க கடிதத்தில், அவர் பரோடாவின் அமைச்சர் என்று கூறப்பட்டுள்ளது, அதே நேரத்தில் அவர் மற்றொரு தகவல்தொடர்புகளில் நானா சாஹிபிடம் இணைந்து இருந்தார் என்று உள்ளது. அவரது கைதுக்குப் பின்னர் நடந்த விசாரணையில் சாட்சி ஒருவர் தந்தியா தோபே கோதுமை நிறம் கொண்டவர், எப்போதும் வெள்ளை சுக்ரி-தார் என்கிற தலைப்பாகை அணிந்தவர் என்று கூறுகிறார்..





1857 இன் இந்தியச் சிப்பாய் கிளர்ச்சியில் பங்கு
ஜூன் 1857 5 அன்றுசிப்பாய்களின் கிளர்ச்சி கான்பூரில்ர் நடந்தது, நானா சாஹேப் கலகக்காரர்களின் தலைவரானார். 1857 ஜூன் 25 அன்று ஆங்கிலேய படைகள் சரணடைந்தன, ஜூன் மாத இறுதியில் நானா பேஷ்வாவாக அறிவிக்கப்பட்டார். ஜெனரல் ஹேவ்லாக் இரண்டு முறை போரில் நானாவின் படைகளுடன் சண்டையிட்டார், அவர்கள் மூன்றாவது முறையாக தோற்கடிக்கப்பட்டு பித்துருக்குத் திரும்பினர், அதன் பிறகு அவர் கங்கையைத் தாண்டி அவதிற்கு பின்வாங்கினார். தாந்தியா தோபே பித்தூரிலிருந்து நானா சாஹேப் என்ற பெயரில் நடிக்கத் தொடங்கினார்.





தாந்தியா தோபே 1857ஜூன் 27, இல் நிகழ்ந்த கான்பூர் கலவரத்திற்கு காரணமாக இருந்த தலைவர்களில் ஒருவர். அப்போதிருந்து, ஆகஸ்ட் 16, 1857 அன்று சர் ஹென்றி ஹேவ்லாக் தலைமையிலான ஆங்கிலேய படையால் வெளியேற்றப்படும் வரை தோபே அந்தப் பகுதியை பாதுகாத்து வந்தார் பின்னர், கான்பூரில் தளபதி சார்லஸ் ஆஷ் வின்ட்ஹாமை தோற்கடித்தார், இது நவம்பர் 27, 1857 முதல் நவம்பர் 28, 1857 வரை நிகழ்ந்தது. எவ்வாறாயினும், சர் கொலின் காம்ப்பெல்லின் கீழ் ஆங்கிலேயர்கள் எதிர் தாக்குதல் நடத்தியபோது தோபே மற்றும் அவரது இராணுவம் பின்னர் தோற்கடிக்கப்பட்டது. தாந்தியா தோபே மற்றும் பிற கிளர்ச்சியாளர்கள் தப்பி ஓடி, ஜான்சியின் ராணியுடன் தஞ்சம் புகுந்தனர், அந்த நேரத்தில் அவருக்கும் உதவி செய்தனர்.

ஆங்கிலேயர்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்க ராணி லட்சுமிபாய்க்கு வெற்றிகரமாக உதவினார். லட்சுமிபாய், குவாலியரை ஆங்கிலேயரிடம் இழந்த பிறகு, நானா சாஹேப்பின் மருமகனான தோபே மற்றும் ராவ் சாஹேப் ஆகியோர் ராஜபுதனத்திற்கு தப்பி ஓடினர். 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆங்கிலேயர்களால் வீழ்த்தப்பட்ட பின்னரும், தாந்த்யா தோபேகாடுகளில் மறைந்து வாழ்ந்து கெரில்லா போராளியாக எதிர்ப்பைத் தொடர்ந்தார். தன்னுடைய எஜமானர் பேஷ்வாவுக்கு மட்டுமே அவர் பதிலளிப்பதாகக் கூறி தனது முன் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளை டோப் ஒப்புக்கொண்டார். 1859 ஏப்ரல் 18 ஆம் தேதி சிவபுரியில் தூக்கு மேடையில் தூக்கிலிடப்பட்டார்.

சிலை
இவர் தூக்கிலிடப்பட்ட மத்திய பிரதேசத்தில் உள்ள சிவபுரி என்ற இடத்தில் இவர் நினைவாக சிலை நிறுவப்பட்டுள்ளது.

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு தொகுதியில் இ-சைக்கிள் விநியோகத்தில் கின்னஸ் சாதனை




**குப்பம், பிப்.2:**

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தனது சொந்த தொகுதியான குப்பம் தொகுதியில் 3 நாட்கள் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். இதில் 2-ம் நாளான நேற்று பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மூத்த குடிமகன்கள் (வீட்டில் எத்தனை பேர் இருந்தாலும்), கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு தலா ரூ.4 ஆயிரம், மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.6 ஆயிரம், கடும் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தலா ரூ.15,000 என ஒவ்வொரு மாதமும் சரியாக 1-ம் தேதி வழங்கப்படுகிறது.

இதில் சந்திரபாபு நாயுடு தனது குப்பம் தொகுதியில் உள்ள பயனாளிகளுக்கு நேரில் இந்த உதவி தொகையை அவரவர் வீடுகளுக்கே சென்று வழங்கினார்.

அதன் பின்னர், குப்பம் தொகுதி சாந்திபுரத்தில் மகளிர் சுய உதவி குழுவினருக்கு மொத்தம் 5,555 இ-சைக்கிள்களை வழங்கினார். அப்போது சந்திரபாபு, மகளிர் உட்பட அனைவரும் சுமார் 3 கி.மீ தூரம் பொதுக்கூட்ட மேடை வரை சைக்கிளில் வந்தனர். 5555 இ-சைக்கிள்கள் விநியோகம், 3 கி.மீ. தூரம் வரை அனைவரும் அதனை ஓட்டியபடி வந்தது என்பது கின்னஸ் சாதனை என கூறி, அங்கிருந்த கின்னஸ் புத்தக பிரதிநிதிகள் அதற்கான சான்றிதழை வழங்கினார்.

## இந்திய அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்திய பாரத் ஜோடோ யாத்திரை: காங்கிரஸ் கட்சி பெருமிதம்




**புதுடெல்லி, பிப்.2:**

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் 'எக்ஸ்' தளத்தில் நேற்று வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை மேற்கொண்ட பாரத் ஜோடோ யாத்திரை நகரில் மூன்று ஆண்டுகளுக்கு முன் நிறைவடைந்தது. 4,000 கி.மீ. தூர நடைப் பயணத்தை ராகுல் காந்தியும், 200-க்கும் மேற்பட்ட தொண்டர்களும் மேற்கொண்டனர். இது 145 நாட்களுக்கும் மேலாக நீடித்தது. 12 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களை கடந்து சென்றது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தல், சமூகப் பிளவு ஆழமடைதல், அரசியல் சர்வாதிகாரம் பெருகுதல் ஆகிய மூன்று செய்திகளை மக்களிடம் கொண்டு சென்ற இந்த யாத்திரை, நமது நாட்டின் அரசியலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகும். இது வரும் தசாப்தங்களுக்கு நினைவுகூரப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# எப்ஸ்டீன் கோப்புகளில் மோடியின் பெயரா? மத்திய அரசு மறுப்பு!




**புதுடெல்லி, பிப்.2:**

எப்ஸ்டீன் கோப்புகள் விவகாரத்தில் பிரதமர் மோடியின் இடம்பெற்றிருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்த நிலையில், மத்திய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம், "எப்ஸ்டீன் கோப்புகளிலிருந்து ஒரு மின்னஞ்சல் செய்தி பற்றிய அறிக்கைகளை நாங்கள் கண்டோம். அதில் பிரதமர் மோடி மற்றும் அவரது இஸ்ரேல் வருகை பற்றிய குறிப்பு உள்ளது.

2017 ஜூலையில் பிரதமர் மோடியின் இஸ்ரேல் வருகையைத் தவிர, மின்னஞ்சலில் உள்ள மற்ற குறிப்புகள் அனைத்தும் குப்பையைப் போன்ற வதந்திகளைவிட சற்று அதிகமே. இது மிகவும் அவமதிப்புடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பெரும் பணக்காரரான ஜெஃப்ரி எப்ஸ்டீன், சிறுமிகளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றவாளியும்கூட. இவரின் குற்றச் செயல்கள் அடங்கிய சுமார் 30 லட்ச பக்கங்கள் கொண்ட ஆவணங்கள், புகைப்படங்கள், விடியோக்கள் அடங்கிய தொகுப்புதான் எப்ஸ்டீன் ஃபைல்ஸ். அமெரிக்காவில் பெரும் பரபரப்பைக் கிளப்பிக் கொண்டிருக்கும் எப்ஸ்டீன் கோப்புகள் விவகாரத்தில் பல்வேறு அரசியல் மற்றும் முக்கிய பிரமுகர்களும் சிக்கியிருப்பதாக அவ்வப்போது அந்நாட்டு நீதித் துறை கூறி வருகிறது.

இந்த நிலையில், பிரதமர் மோடியின் பெயரும் இடம்பெற்றிருப்பதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து, காங்கிரஸும் கேள்வி எழுப்பியுள்ளது.

எப்ஸ்டீன் கோப்புகளைக் குறிப்பிட்டுப் பேசிய காங்கிரஸ் தலைவர் பவன் கேரா, "இது தேசத்துக்கே அவமானகரமான ஒன்று. அமெரிக்க அதிபருக்காக இஸ்ரேலில் பிரதமர் மோடி ஆடிப் பாடியதாக எப்ஸ்டீன் கோப்புகளில் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் மூலம் அவருடன் (எப்ஸ்டீன்) பிரதமருக்கு நெருக்கம் இருக்கக் கூடும் என்று தெரிகிறது.

எப்ஸ்டீனுக்கும் பிரதமர் மோடிக்கும் இடையிலான இந்த மன்னிக்க முடியாத தொடர்பு, நாட்டின் கண்ணியம் மற்றும் சர்வதேச நற்பெயரைக் கெடுப்பதாய் இருக்கும். இதுகுறித்து பிரதமர் மோடியிடமிருந்து உடனடியான பொறுப்புக் கூறலும் விளக்கமும் அளிக்கப்பட வேண்டும்" என்று பிரதமர் மோடி மீது கேள்வி எழுப்பினார்.

## அமெரிக்க பங்குச்சந்தையின் வக்கீல் நோட்டீசை ஏற்க அதானி சம்மதம்



**புதுடெல்லி, பிப்.2:**

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் அமெரிக்காவில் முதலீட்டாளர்களிடையே முதலீடு திரட்டியது. லஞ்சம் கொடுக்கப்பட்டதை மறைத்து, தவறான தகவல்களுடன் முதலீட்டாளர்களை திசைதிருப்பி முதலீடு திரட்டப் பட்டதாக புகார் எழுந்தது.

இதுகுறித்து கவுதம் அதானி, அவருடைய உறவினர் சாகர் அதானி ஆகியோர் மீது அமெரிக்காவில் புரூக்ளின் நகரில் உள்ள கோர்ட்டில் கடந்த 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்க பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் வழக்கு தொடர்ந்தது. அத்துடன், இந்தியாவில் ரூ.2 ஆயிரத்து 400 கோடி லஞ்சம் அளித்ததாக அமெரிக்க அரசு வக்கீல்கள் மற்றொரு வழக்கு தொடர்ந்தனர்.

ஆனால், அதானியும், சாகர் அதானியும் இந்தியாவிலேயே இருந்து விட்டதால், அமெரிக்க முதலீட்டாளர்களை ஏமாற்றிய வழக்கில், அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையத்தால் அவர்களுக்கு நோட்டீஸ் அளிக்க முடியவில்லை. அதனால் இவ்வழக்கு ஓராண்டுக்கு மேலாக முடங்கிக் கிடந்தது.

வக்கீல் நோட்டீஸ் வழங்க மாற்று வழிமுறைகளை கையாளுமாறு கோர்ட்டை அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையம் கேட்டுக்கொண்டது. இந்நிலையில், புரூக்ளின் கோர்ட்டில் அதானியின் வக்கீல்கள் ஒரு மனு தாக்கல் செய்துள்ளனர். அதில், அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையத்தின் வக்கீல் நோட்டீசை ஏற்க அதானியும், சாகர் அதானியும் சம்மதம் தெரிவித்து விட்டதாக கூறியுள்ளனர்.

இந்த மனுவை நீதிபதி ஏற்றுக்கொண்டால், அமெரிக்க பங்கு பரிவர்த்தனை ஆணையம் வழக்கை முன்னெடுத்துசெல்லும். 90 நாட்களுக்குள் அதானி பதில் மனு தாக்கல் செய்ய நீதிபதி அனுமதி அளிப்பார். அதற்கு ஆணையம் 60 நாட்களுக்குள் ஆணையம் எதிர்மனு தாக்கல் செய்த பிறகு, அதானி 45 நாட்களுக்குள் மீண்டும் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று அமெரிக்க நீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கஞ்சா எண்ணெய் கடத்திய வழக்கில் பெண்ணுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை

**பாலக்காடு, பிப்.2:**

கேரள மாநிலம் பாலக்காடு ரெயில் நிலையம் பகுதியில் கடந்த 2018-ம் ஆண்டு அக்டோபர் 10-ந்தேதி கலால்துறை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எம்.ராகேஷ் தலைமையில் சோதனை நடத்தப்பட்டது. அப்போது கஞ்சா எண்ணெய் கடத்தி வந்த தமிழ்நாடு தஞ்சாவூரை சேர்ந்த சிந்துஜா(வயது 29) என்பவரை கைது செய்தனர்.

மேலும் அவரிடம் இருந்து 2.5 கிலோ கஞ்சா எண்ணெய்யை பறிமுதல் செய்தனர். இந்த வழக்கு பாலக்காடு 2-ம் கூடுதல் செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்தநிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி டி.சுதீர் டேவிட், கஞ்சா எண்ணெய் கடத்தி வந்த வழக்கில் சிந்துஜாவுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். அபராதம் செலுத்த தவறினால் மேலும் 3 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி கூறினார். இதற்கிடையே ஜாமீனில் வெளியே வந்த அவர் நிபந்தனைகளை மீறி மீண்டும் கஞ்சா கடத்தியதற்காக கன்னியாகுமரியில் மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐ.ஜி. அந்தஸ்து பெற 2 ஆண்டுகள் மத்திய பணி கட்டாயம் - மத்திய அரசு உத்தரவு

**புதுடெல்லி, பிப்.2:**

மத்திய அரசில் ஐ.ஜி. மற்றும் அதற்கு சமமான அந்தஸ்து கொண்ட ஐ.பி.எஸ். அதிகாரிகள் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு மத்திய அயற்பணியில் 2 ஆண்டுகள் போலீஸ் சூப்பிரண்டு அல்லது டி.ஐ.ஜி. அந்தஸ்தில் பணியாற்றுவது கட்டாயம் என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. 2011-ம் ஆண்டு பேட்ச் மற்றும் அதற்கு பிந்தைய பேட்ச் போலீஸ் அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு பொருந்தும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளுக்கு மத்திய அரசில் கீழ்மட்டத்தில் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக ஒரு அதிகாரி தெரிவித்தார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு ஏற்கனவே இதுபோன்ற நிபந்தனை உள்ளது.

## பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: தலைமை ஆசிரியர் கைது

**கவுகாத்தி, பிப்.2:**

அசாம் மாநிலம் சோனித்பூர் மாவட்டம் மிசாமாரி நகரில் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியின் தலைமை ஆசிரியராக கனக் சந்திர பொர்டொலொய்.

இவர் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வரும் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். கடந்த 23ம் தேதி இந்த சம்பவம் நடந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவி கடந்த சில நாட்களுக்குமுன் பொற்றோரிடம் கூறியுள்ளார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர், உடனடியாக போலீசில் புகார் அளித்தனர். புகாரை தொடர்ந்து வழக்குப்பதிவு செய்த போலீசார், மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தலைமை ஆசிரியர் கனக் சந்திராவை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## 2-வது திருமணம், லிவிங் டுகெதர் குற்றங்களுக்கு 7 ஆண்டு சிறை: உத்தராகண்ட் பொது சிவில் சட்டத்தில் திருத்தம்

**டேராடூன், பிப்.2:**

இந்தியாவில் முதல் மாநிலமாக உத்தராகண்டில் பொது சிவில் சட்டம் கடந்த 2025 ஜனவரி 27 முதல் அமலுக்கு வந்துள்ளது. இது மதம், பாலின வேறுபாடின்றி திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை மற்றும் லிவ்-இன் உறவுகளுக்கு (திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழ்வது) ஒரே சட்டவிதிகளை உறுதி செய்கிறது.

இந்நிலையில் பொது சிவில் சட்டத்தில் திருத்தங்கள் செய்து அதை உத்தராகண்ட் அரசு வலுப்படுத்தியுள்ளது. இந்த திருத்தங்கள் தொடர்பான அவசர சட்டத்துக்கு மாநில ஆளுநர் குர்மீத் சிங் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து புதிய விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இதன்படி கட்டாயமாகவோ அல்லது மோசடியாகவோ திருமணம் செய்வது மற்றும் லிவ்-இன் உறவில் ஈடுபடுவதற்கு கடும் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருவர் தனது திருமணத்தை மறைத்து இன்னொரு திருமணம் செய்துகொள்வது அல்லது லிவ்-இன் உறவில் ஈடுபடுவது இனி கடும் குற்றமாக கருதப்படும். இதுபோல் லிவ்-இன் உறவில் உள்ள ஒருவர் அதை மறைத்து மற்றொரு லிவ்-இன் உறவில் ஈடுபடுவதும் கடும் குற்றமாகும். இந்த குற்றங்களுக்கு இனி 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும். சிறாருடன் லிவ்-இன் உற வில் ஈடுபடும் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு 6 மாத சிறை, ரூ.50,000 அபராதம் விதிக்கப்படும்.

## ராமர் கோயில் கட்டுமான பணி ஏப்ரல் மாதம் முடிவடைகிறது

**அயோத்தி, பிப்.2:**

அயோத்தி ராமர் கோயில் கட்டுமான குழுவின் ஆலோசனை கூட்டம் நேற்று முடிவடைந்தது. இதன்பின் ராமர் கோயில் கட்டுமான குழுவின் தலைவர் நிருபேந்திர மிஸ்ரா அளித்த பேட்டியில் கூறியதாவது:

ராமர் கோயில் கட்டுமானப் பணிகளை எல் அண்ட் டி மற்றும் டாடா கன்சல்டன்சி நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. இந்த நிறுவனங்கள் ஏப்ரல் 30-ம் தேதிக்குள் தங்கள் பணிகளை முடித்து விட்டு கோயில் வளாகத்தை விட்டு வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கட்டுமானத்துக்கான பணம் செலுத்துதல் உட்பட அனைத்து பணிகளையும் நிறைவு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் அனைத்துக்கும் 3 ஆண்டு உத்தரவாதம் வழங்கியுள்ளன. பராமரிப்பு பணிக்கான ஒரு சிறு குழு மட்டும் கோயில் வளாகத்தில் தங்கியிருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக சட்டமன்ற தேர்தல்: 'இலவசம்' வாக்குறுதிகளுக்கு தடை கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு



**புதுடெல்லி, பிப்.2:**

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதற்கு தடை விதிக்க உத்தரவிடக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மதுரையை சேர்ந்த கே.கே.ரமேஷ் சார்பில் வக்கீல் ஜெய சுகின், நரேந்தர் குமார்வர்மா ஆகியோர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், "தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதால் மாநில அரசுக்கு நிதிச்சுமை ஏற்படுகிறது.

அறிவிக்கப்படும் இலவச வாக்குறுதி திட்டங்களால் ஏற்படும் நிதிசார் பாதிப்புகள், அதற்கான நிதி முதலீடு குறித்து அரசியல் கட்சிகள் வெளியிட வேண்டும். எனவே, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதற்கு தடை விதிக்க மத்திய அரசுக்கும், தேர்தல் கமிஷனுக்கும் உத்தரவிட வேண்டும்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன் இலவச வாக்குறுதி திட்டங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பதை தடுக்க தேர்தல் நடத்தை விதிகளை திருத்த வேண்டும். இலவச வாக்குறுதி திட்டங்களின் சாத்தியக்கூறுகளை ஆராய நிதி ஆயோக், ரிசர்வ் வங்கி போன்றவற்றின் நிபுணர்களை கொண்ட சுதந்திரமான குழுவை கொண்டு ஆராய வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய அரசின் தேசிய மத நல்லிணக்க அறக்கட்டளையை மூட முடிவு

**புதுடெல்லி: , பிப்.2:**

பாபர் மசூதி-ராமர் கோயில் விவகாரத்தில் ஏற்பட்ட மதக் கலவரங்களின் தாக்கமாக 1992-ல் தேசிய மதநல்லிணக்க அறக்கட்டளையை (என்எப்சிஎச்) மத்திய அரசு உருவாக்கியது. இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி அமைப்பாகும்.

இந்நிலையில் மத்திய அமைச்சர்கள் குழுவின் பரிந்துரையை ஏற்று, இந்த அமைப்பை மூடிவிட உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இதற்கு முக்கியமாக, கடந்த 10 வருடங்களில் எந்த ஒரு தீவிரவாதத் தாக்குதலும் நடைபெறவில்லை எனக் காரணம் கூறப்பட்டு உள்ளது.

என்எப்சிஎச் அமைப்பின் சார்பில், ஒரு முக்கியத் திட்டம் அமலில் உள்ளது. நாட்டில் வகுப்புவாத, சாதி, இன அல்லது தீவிரவாத வன்முறையால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் அது. இந்த நிதியுதவி திட்டத்தை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைக்கு மாற்றவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

## ஹைதராபாத் ஏடிஎம்மில் பணம் செலுத்த சென்றவரிடம் துப்பாக்கிச் சூடு நடத்தி ரூ.6 லட்சம் கொள்ளை

**ஹைதராபாத், பிப்.2:**

ஹைதராபாத் நாம்பல்லி பகுதியில் ஜவுளிக்கடை நடத்தி வருபவர் ரிஷாத். இவர் தினமும் தனது கடையில் நடக்கும் வியாபார பணத்தை மறுநாள் காலையில் அங்குள்ள ஒரு ஏடிஎம் மையத்துக்கு சென்று தனது வங்கி கணக்கில் செலுத்துவது வழக்கம். அதுபோல் நேற்று அதிகாலை ஒரு பையில் ரூ.6 லட்சம் பணத்துடன், கோட்டி பகுதியில் பேங்க் சாலையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் ஏடிஎம்-க்கு சென்றார். அப்போது இவரை பின் தொடர்ந்து வந்த இருவர், முகக்கவசம் அணிந்து இவரை நெருங்கி, பணப்பையை பறித்துக் கொண்டு பைக்கில் தப்பினர்.

அப்போது திருடன், திருடன் என கத்திய ரிஷாத்தை கைத் துப்பாக்கியால் சுட்டு விட்டு மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பி தலைமறைவாகி விட்டனர். ரிஷாத்துக்கு காலில் துப்பாக்கி குண்டு பாய்ந்ததால் அவரால் தொடர்ந்து ஓட முடியாமல் கீழே விழுந்து விட்டார். உடனே அங்கிருந்தவர்கள் ரிஷாத்தை சிகிச்சைக்காக காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து ரிஷாத் அளித்த புகாரின் பேரில் கோட்டி போலீஸார் சம்பவ இடத்தில் கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். இந்த கொள்ளை சம்பவம் நேற்று காலை 6 மணி முதல் 6.30 மணிக்குள் நடந்துள்ளது. ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள அப்பகுதியில், கொள்ளையர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி பணத்தை கொள்ளை அடித்து சென்றுள்ளது பொது மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது. கொள்ளையர்களை பிடிக்க 5 தனிப்படை அமைக்கப்பட்டிருப்பதாக டிஎஸ்பி சில்பாவல்லி தெரிவித்துள்ளார். இதனிடையே துப்பாக்கி சூடு நடைபெற்ற இடத்தை போலீஸார் ஆய்வு செய்தனர்.

## லஞ்சம் வாங்கும்போது கைது... குழந்தை போல் அலறி ஆர்ப்பாட்டம் செய்த போலீஸ் இன்ஸ்பெக்டர்



**பெங்களூரு, பிப்.2:**

கர்நாடக மாநிலம் கே.பி. அக்ரஹாரா காவல் நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வருபவர் கோவிந்தராஜு. இவர் ரியல் எஸ்டேட் தொழிலதிபரான அக்பர் என்பவரை மோசடி வழக்கில் இருந்து விடுவிப்பதற்காக ரூ.5 லட்சம் பணத்தை லஞ்சமாக கேட்டுள்ளார். இதன்படி கடந்த 24-ந்தேதி அக்பர் ரூ.1 லட்சம் லஞ்சம் கொடுத்துள்ளார்.

மீதமுள்ள பணத்தை விரைவில் கொடுத்துவிடுவதாக கோவிந்தராஜுவிடம் கூறிய அக்பர், இது தொடர்பாக லோக் ஆயுக்தா போலீசில் புகார் அளித்துள்ளார். இதையடுத்து லோக் ஆயுக்தா போலீசார், கோவிந்தராஜுவை கையும், களவுமாக பிடிக்க திட்டமிட்டனர். இதன்படி ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை அக்பரிடம் கொடுத்து, அதனை கோவிந்தராஜுவிடம் கொடுக்குமாறு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதன்படி சமராஜ்பேட் பகுதிக்கு கோவிந்தராஜுவை வரவழைத்து, ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை அக்பர் அவரிடம் கொடுத்தபோது, அங்கு மறைந்திருந்த லோக் ஆயுக்தா போலீசார், கோவிந்தராஜுவை மடக்கிப் பிடித்து அதிரடியாக கைது செய்தனர்.

அவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்படும்போது இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் குழந்தை போல் அலறி ஆர்ப்பாட்டம் செய்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.




## சென்னையில் பிஹார் குடும்பம் கொலை வழக்கு: இளம்பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்படவில்லை என தகவல்

**சென்னை, பிப்.02:** பிஹாரைச் சேர்ந்த இளம்பெண் உட்பட 3 பேர் கொலை வழக்கில், இளம் பெண் பாலியல் வன்கொடுமை செய்யப் படவில்லை, தலையில் இரும்பு கம்பியால் அடித் ததால் ஏற்பட்ட காயமே உயிரிழப்புக்கு காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கை யில் தெரிய வந்துள்ளது.



பிஹார் மாநிலம் ஷேக்பூரா மாவட்டத்தைச் சேர்ந்தவர் கவுரவ் குமார்(24). இவர் தனது மனைவி முனிதா குமாரி (20) மற்றும் 2 வயது மகன் பிர்மானி குமார் ஆகியோருடன் வேலை தேடி சென்னை வந்தார். இந்நிலையில், கடந்த 26ம் தேதி, அடையாறு இந்திரா நகர் பகுதியில் சாக்கு மூட்டை யில் ரத்தக் காயங்களுடன் கவுரவ் குமாரின் உடல் கண் டெடுக்கப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பாக அடையாறு போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, பிஹாரைச் சேர்ந்த சிக்கந்தர் (எ) சத் யேந்தர்(30), லலித் யாதவ்(40) மற்றும் விகாஷ் குமார்(24) ஆகிய 3 பேரைக் கைது செய்தனர். விசாரணையில், அவர் கள் கவுரவ் குமாரை மட்டுமின்றி, அவரது மனைவி மற்றும் 2 வயது குழந்தையையும் கொலை செய்து வெவ்வேறு இடங் களில் வீசியது தெரியவந்தது.

குழந்தையின் உடல் மத்திய கைலாஷ் ரயில்வே பாலம் அருகேயுள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் கண்டெடுக்கப்பட் டது. மனைவி முனிதா குமாரியின் உடல் பெருங்குடி குப்பை மேட்டில் இருந்து 3 நாட்களுக்குப் பிறகு மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மூவரும் முனிதா குமாரியைப் பாலியல் வன் கொடுமை செய்ய முயன்றுள்ளனர்.

அதைத் தடுக்க வந்த கணவர் கவுரவ் குமார் மற்றும் அழுது கொண்டிருந்த 2 வயது குழந்தை ஆகியோரால் தங் களது குற்றம் வெளியில் தெரிந்துவிடும் என்ற பயத்திலும் மூவரையும் அடித்துக் கொலை செய்ததாகக் கைதானவர்கள் வாக்குமூலம் அளித்தனர். முனிதா குமாரியின் உடல் ராயப் பேட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவக் குழுவினரால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது.

அதில், முனிதா குமாரி பாலியல் வன்கொடுமை செய்யப் படவில்லை, பாலியல் துன்புறுத்தலுக்கான தடயங்கள் ஏது மில்லை, தலையில் இரும்பு கம்பியால் பலமாக தாக்கப்பட் டதால் ஏற்பட்ட காயமே அவரது உயிரிழப்புக்கு முதன்மைக் காரணம் என்பது தெரியவந்துள்ளது.

## சென்னை: லாரி சக்கரத்தில் சிக்கி திமுக நிர்வாகி உயிரிழப்பு

**சென்னை, பிப்.02:** லாரியை முந்திச் செல்ல முயன்ற போது, லாரி சக்கரத்தில் சிக்கி திமுக நிர்வாகி உயிரிழந்தார்.

சென்னை சூளைமேடு பாரதியார் தெருவைச் சேர்ந்தவர் வெங்கட சுப்பிரமணியன். கட்டிட ஒப்பந்ததாரர். இவரது மகன் மோகன கிருஷ்ணன்(32). கால் டாக்ஸி ஓட்டுநர். மேலும், திமுக 106-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளராக வும் இருந்து வந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, அதே பகுதியைச் சேர்ந்த தனது நண்பர் கேசவன் என்பவருடன் இருசக்கர வாக னத்தில் வடபழனி நோக்கி சென்றார். திருநகர் பேருந்து நிறுத் தம் அருகே 100 அடி சாலையில் சென்றபோது, அந்த வழி யாக இரும்பு தகடுகளை ஏற்றி வந்து கொண்டிருந்த லாரியை முந்திச் செல்ல முயன்றார். அப்போது, எதிர்பாராத விதமாக நிலைத் தடுமாறி இருவரும் கீழே விழுந்தனர். இதில், லாரி சக்கரத்தில் சிக்கிக் கொண்ட மோகன கிருஷ்ணன், உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கேசவன் படு காயம் அடைந்தார்.

தகவல் அறிந்து வந்த பாண்டி பஜார் போக்குவரத்து புல னாய்வுப் பிரிவு போலீஸார், படுகாயம் அடைந்த கேசவனை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக் காக அனுப்பி வைத்தனர். உயிரிழந்த மோகன கிருஷ்ணன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், லாரி ஓட்டுநரான விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த சுதாகர்(48) என்பவரைக் கைது செய் து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சட்ட விரோதமாக தங்கி இருந்த வங்கதேசத்தினர் 4 பேர் கைது

### போலி ஆதார் கார்டுகள் பறிமுதல்

**திருப்பூர், பிப்.02:** திருப்பூர் வீரபாண்டி முத்துநகர், மீனம்பாறை ரோடு பகுதியில் உள்ள பனியன் நிறுவனங்களில் வங்கதேசத்தை சேர்ந்தவர்கள் வேலை செய்து வருவதாக வீரபாண்டி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.



இதையடுத்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இதில் அங்கு வேலை செய்த ஷேரீப், ஷோகாக், லீட்டன், ரகீர் ஆகியோர் வங்காள தேசத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது.

அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்திய போது முத்துநகர் பகுதியில் வடமாநில தொழிலாளர்களுடன் தங்கி இருந்து கடந்த 2 ஆண்டுகளாக பனியன் நிறுவனங்களில் வேலை செய்து வருவது தெரிய வந்தது.

மேலும் அவர்களிடம் மேற்கு வங்க மாநிலத்தில் குடியிருப்பவர்கள் போல் போலி ஆதார் கார்டுகள் இருந்தன. அதனை போலீசார் பறிமுதல் செய்தனர்.

அவர்கள் அனைவரும் முறையான ஆவணங்கள் இன்றி மேற்கு வங்க மாநிலம் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்து திருப்பூர் வந்து வேலை செய்து வந்துள்ளனர். இதைத்தொடர்ந்து சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக 4 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## நீலகிரியில் 76 சட்டவிரோத தனியார் தங்கும் விடுதிகளுக்கு சீல்

### உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல்

**நீலகிரி, பிப்.02:** நீலகிரி மாவட்டத்தில் சட்டவிரோதமாகச் செயல்படும் 920 தங்கும் விடுதிகளில் 76 விடுதிகளுக்கு சீல் வைத்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.



சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்.சதீஷ்குமார் மற்றும் டி.பரதசக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு உதகை, கொடைக்கானலில் சட்டவிரோதமாகச் செயல்படும் தங்கும் விடுதிகள் மீது நடவடிக்கை எடுத்து அவற்றுக்கு சீல் வைக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு சிறப்பு அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, நீலகிரி மாவட்டத்தில் சட்டவிரோத தங்கும் விடுதிகள் மீது எடுத்த நடவடிக்கை குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் அறிக்கை தாக்கல் செய்தார். அதில், நீலகிரி மாவட்டத்தில் 920 விடுதிகள் சட்டவிரோதமாகச் செயல்படுகின்றன. இந்த தங்கும் விடுதிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி, அவற்றில் 844 விடுதிகளுக்கு சீல் வைக்க இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில், 76 விடுதிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விடுதிகளின் கட்டட உரிமை உள்ளிட்ட ஆவணங்களைப் பரிசீலித்து வருகிறோம்.

இந்த விடுதிகளை உள்ளூரைச் சேர்ந்த 521பேரும், வெளியூர்களைச் சேர்ந்த 399 பேரும் நடத்தி வந்தது தெரியவந்துள்ளது. புதிய கட்டடங்களுக்கு அனுமதி வழங்கும் சட்டத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உள்ளாட்சி அமைப்புகள், வனத்துறை, மின்துறை, கனிம வளத்துறை அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் கடந்த மாதம் 21-ஆம் தேதி சுற்றறிக்கை அனுப்பி உத்தரவு பிறப்பித்துள்ளார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்த நீதிபதிகள், விசாரணையை 4 வாரங்களுக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

## தென்பெண்ணை நதிநீர் வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் இன்று தீர்ப்பு

**புதுடெல்லி, பிப்.02:** தென்பெண்ணை ஆற்று நீர் விவகாரத்தில் நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரி தமிழக அரசு தாக்கல் செய்த மனு மீது உச்ச நீதிமன்றத்தில் நாளை தீர்ப்பு வழங்கப்படுகிறது.



தென்பெண்ணை ஆற்றின் கிளை நதியில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தடை விதிக்கக் கோரியும், இந்த ஆற்றின் நீர் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றம் அமைக்கக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், "கர்நாடக அரசு அணை கட்டுவதைத் தடுக்க வேண்டும்.

உரிய தண்ணீரை தமிழகத்துக்கு வழங்கவும், நதி நீர் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றம் அமைக்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என கோரப்பட்டிருந்தது.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், என்.வி. அஞ்சரியா அங்கே அமர்வு விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் இன்று (பிப்.2) தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் அன்பில் மகேஸ் வேண்டுகோளை ஏற்று இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் நிறுத்தம்

**சென்னை, பிப்.02:** சம வேலைக்கு சம ஊதியம் கோரி தமிழகம் முழுவதும் கடந்த 37 நாட்களாக நடைபெற்றுவந்த இடைநிலை ஆசிரியர் போராட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.



தமிழகத்தில் அரசுப் பள்ளி இடைநிலை ஆசிரியர்களுக்கு உள்ள ஊதிய முரண்பாட்டை களைந்து சம வேலைக்கு சம ஊதியம் வழங்கக் கோரி இடைநிலை ஆசிரியர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். இதற்காக பல்வேறுகட்ட போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இக்கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஏ) சார்பில் கடந்த டிச.26-ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இதுதொடர்பாக பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள், அமைச்சர் ஆகியோருடன் 2 முறை நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படவில்லை. அதேபோல், போராட்டத்தில் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் பிடித்தம் செய்யப்படும் என்று தொடக்கக் கல்வித் துறை எச்சரிக்கை விடுத்தது. எனினும், ஆசிரியர்களின் போராட்டம் தொடர்ந்தது.

இதற்கிடையே போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலான இடைநிலை ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதத்துக்கான ஊதியத்தை தமிழக அரசு நிறுத்திவைத்தது. அதேநேரம் தொடர்ந்து 37-வது நாளாக சென்னை டிபிஐ வளாகம் முன் நேற்றும் இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிடப்பட உள்ளது. அதன் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்கள் ஊதியப் பிரச்சினை குறித்து முடிவு எடுக்கப்படும். போராட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பள்ளிக்குத் திரும்பி கற்பித்தல் பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழக அரசின் மீது நம்பிக்கை வைத்து போராட்டங்களில் ஈடுபடாமல் மாணவர்கள் நலன் கருதி பள்ளிக்கு தொடர்ந்து சென்று கற்பித்தல் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். மேலும், மொத்தமுள்ள இடைநிலை ஆசிரியர்களில் பணிகளுக்குச் செல்லாமல் இருக்கின்ற 5,781 ஆசிரியர்களையும் கற்பித்தல் பணிக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து எஸ்எஸ்டிஏ பொதுச்செயலர் ஜெ. ராபர்ட் வெளியிட்ட அறிக்கையில், "அமைச்சர் கோரிக்கையை ஏற்றும், தமிழக அரசு மற்றும் முதல்வர் மீது நம்பிக்கை வைத்தும், மாணவர்கள் கல்வி நலன், நெடுநாட்களாகப் போராடிவரும் இடைநிலை ஆசிரியர்கள் உடல்நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும் நல்லெண்ண அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக தள்ளிவைக்கப்படுகிறது. கற்றல் இடைவெளியை நீக்கி முன்பைவிட கற்பித்தல் பணியில்வெகு சிறப்பாக ஈடுபடுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

## மதுரை வழியாக செல்லும் 3 ரயில்கள் பாதை மாற்றம்

**மதுரை, பிப்.02:** பராமரிப்புப் பணிகள் காரணமாக மதுரை வழியாக இயக்கப்படும் 3 விரைவு ரயில்கள் பிப்ரவரி மாதத்தில் மாற்றுப்பாதையில் இயக்கப்படவுள்ளன.

இதுகுறித்து தெற்கு ரயில்வே சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

மதுரை ரயில்வே கோட்டத்துக்குள்பட்ட ரயில் வழித்தடங்களில் பிப்ரவரி மாதத்தில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளன. இதன்காரணமாக நாகர்கோவிலிருந்து பிப்.5, 8, 12, 15, 19, 22, 26 ஆகிய தேதிகளில் காலை 6.15 மணிக்கு மும்பை செல்லும் விரைவு ரயில் (எண்: 16352), கன்னியாகுமரியிலிருந்து பிப்.7, 14, 21, 28 ஆகிய தேதிகளில் காலை 5.50 மணிக்கு ஹொரா செல்லும் அதிவிரைவு ரயில் (எண்: 12666), கன்னியாகுமரியிலிருந்து பிப்.6, 13, 20, 27 ஆகிய தேதிகளில் காலை 5.15 மணிக்கு ஹைதராபாத் செல்லும் ரயில் (எண்: 07229) மதுரை, கொடைக்கானல் சாலை, திண்டுக்கல் வழித்தடத்துக்குப் பதிலாக விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சி வழியாக இயக்கப்படும்.

பயணிகளின் வசதிக்காக இந்த ரயில்கள் அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் பிப். 6-ம் தேதி வரை மிதமாக மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை, பிப்.02:** தமிழகத்தில் இன்று முதல் வரும் 6-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: லட்சத்தீவு, கேரளா மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசைக் காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (பிப்.1) ஓரிரு இடங்களிலும், 2-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 3-ம் தேதி கடலோர மாவட்டங்களிலும், 4-ம் தேதி தமிழகத்தில் சில இடங்களிலும், 5-ம் தேதி ஓரிரு இடங்களிலும், 6-ம் தேதி தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் அதிகாலை நேரத்தில் மிதமான பனிமூட்டமும் ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, கரூர் மாவட்டங்களில் லேசான பனிமூட்டமும் காணப்படும். வரும் 2, 3, 4-ம் தேதிகளில் கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை நேரத்தில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 22 செல்சியஸ் அளவில் இருக்கும்.

தமிழகத்தில் ஜன. 31-ம் தேதி (நேற்று) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் திருத்தணியில் 16.5 டிகிரி செல்சியஸ், மலைப் பகுதியான ஊட்டியில் 6.4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.

## பாடம் நடத்துவதை நிறுத்திய அரசு மருத்துவர்கள் - தமிழகம் முழுவதும் போராட்டம் தீவிரம்




**சென்னை, பிப்.02:** தமிழகம் முழுவதும் போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ள அரசு மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பதை நிறுத்தியுள்ளனர்.

'முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354-ஐ மறு ஆய்வு செய்து, அரசு மருத்துவர்களுக்கான திருத்தப்பட்ட ஊதியம், 20 ஆண்டுகள் கடந்த மூத்த முதுநிலை மருத்துவர்களுக்கு ஊக்கத்தொகை, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு படிகள் ரூ.3,000 வழங்குவது, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய மருத்துவ பணியிடங்களை உருவாக்குவது' என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இதற்காக, பல்வேறு சங்கங்கள் ஒருங்கிணைந்து, அனைத்து அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பை உருவாக்கி, சுகாதாரத் துறை அமைச்சர், செயலருடன் பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை.

இதையடுத்து, தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் 20 ஆயிரம் மருத்துவர்கள் கடந்த 12-ம் தேதி முதல் கோரிக்கைகள் அடங்கிய அட்டை அணிந்து பணியாற்றினர்.

அடுத்த கட்டமாக 48 மணி நேர உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பதை அரசு மருத்துவர்கள் தற்போது நிறுத்தியுள்ளனர்.

## தொழிலதிபரை கட்டிப்போட்டு நகை, பணம் கொள்ளை: குற்றவாளிகளை நெருங்கிவிட்டதாக புழல் போலீஸ் தகவல்




**சென்னை, பிப்.02:** தொழிலதிபரை கட்டிப்போட்டு நகை, பணம் கொள்ளை அடிக்கப்பட்ட வழக்கில் குற்றவாளிகளை நெருங்கி விட்டதாக, போலீஸார் தெரிவித்துள்ளனர்.


சென்னை, புழல் அடுத்த மகாவீர் கார்டன் பகுதியைச் சேர்ந்தவர் விஜயகுமார். இவர், மணிப்பூர் மாநிலத்தில், கம்பளிப் போர்வைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் அதிகாலை இவரது வீட்டுக்குள் 6 பேர் கொண்ட மர்ம கும்பல் ஒன்று முகமூடி அணிந்து அதிரடியாக புகுந்தது. வீட்டுக்குள் நுழைந்த அக்கும்பல், விஜயகுமார், அவரது மனைவி, மகள்கள் மற்றும் தாயார் ஆகியோரை கத்திமுனையில் மிரட்டி சிறைபிடித்தனர்.


மேலும், குடும்பத்தினர் அனைவரையும் கட்டிப்போட்டுவிட்டு, பீரோவில் இருந்த 30 பவுன் தங்க நகைகள் மற்றும் 25 லட்சம் ரூபாய் ரொக்கப் பணத்தை எடுத்துக் கொண்டு, தாங்கள் கொண்டு வந்த காரில் மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றனர்.

சினிமா பாணியில் நடந்த இந்த கொள்ளை குறித்து தகவல் அறிந்த புழல் காவல்துறையினர், சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள போலீஸார், குற்றவாளிகளைப் பிடிக்க 5 தனிப்படைகளை அமைத்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளையர்கள் தப்பிச் சென்ற பாதையில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகள் மற்றும் அந்தப் பகுதியில் பதிவான செல்போன் சிக்னல்களை கொண்டு போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர். தற்போது கிடைத்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில், கொள்ளையர்களை நெருங்கிவிட்டதாகவும், இன்னும் ஓரிரு நாட்களில் குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்படுவார்கள் என்றும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடலூரில் தைப்பூச ஜோதி தரிசனம்! ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு





**வடலூர், பிப்.02:** வடலூர் வள்ளலார் சத்ய ஞானசபையில் தைப்பூச பெருவிழா ஜோதி தரிசனம் இன்று (பிப். 1) காலை 6 மணியளவில் நடைபெற்றது.

திரையை விலக்கி ஜோதி தரிசனம் காண்பிக்கப்பட்டபோது, ஆயிரக்கணக்கான சன்மார்க்க அன்பர்கள், பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

மேலும், காலை 10 மணி, பிற்பகல் 1 மணி, இரவு 7 மணி, 10 மணி, மறுநாளான திங்கள்கிழமை (பிப். 2) காலை 5.30 மணி என 6 காலங்கள் 7 திரைகள் நீக்கி ஜோதி தரிசனம் நடைபெறவுள்ளது.

வடலூர் வள்ளலார் சத்ய ஞான சபையில் 155-வது தைப்பூச பெருவிழா கொடியேற்றத்துடன் சனிக்கிழமை (ஜன.31) காலை தொடங்கியது. தைப்பூச ஜோதி தரிசனத்தையொட்டி, நேற்று காலை 7.30 மணியளவில் தருமசாலையிலும், மருதூர் மற்றும் நற்கருங்குழி வள்ளலார் சந்நிதியிலும், காலை 10 மணியளவில் ஞானசபையிலும் சன்மார்க்கக் கொடியேற்றம் நடைபெற்றது.

ஞானசபையில் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வள்ளலார் திருவுருவப் படம், சன்மார்க்க கொடி, அவர் பயன்படுத்திப் பொருட்கள் வைக்கப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து இன்று காலை திரை விலக்கி ஜோதி தரிசனம் காண்பிக்கப்பட்டது.

வள்ளலார் சித்தி பெற்ற மேட்டுக்குப்பம் சித்தி வளாக திருமாளிகையில் வருகிற 3-ஆம் தேதி திருஅறை தரிசனம் நடைபெறவுள்ளது.

தைப்பூசத்தையொட்டி கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட அண்டை மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வடலூரில் குவிந்து வருகின்றனர்.

# சமூக வலைதளங்களில் ஆயுதங்களுடன் புகைப்படங்களை பதிவேற்றம் செய்தால் கடும் நடவடிக்கை!

**தூத்துக்குடி, பிப்.02:** தூத்துக்குடி மாவட்டத்தில், ஆயுதங்களை வைத்துக்கொண்டு விடியோ/ரீல்ஸ் அல்லது புகைப்படத்தை சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். சிலம்பரசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சமூக வலைதளங்களில் வாள், அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களை வைத்துக்கொண்டு புகைப்படங்களை பதிவேற்றம் செய்வது, சாதி மத மோதலை தூண்டும் வகையில் ரீல்ஸ் வைத்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டத்தில் 2026 ஜனவரி மாதத்தில் மட்டும் மேற்படி ஆயுதங்களை வைத்துக் கொண்டு புகைப்படம், விடியோ பதிவு செய்து பொதுஅமைதிக்கு பங்கம் விளைவித்தல், பொதுமக்களை அச்சுறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காக 15 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வருபவர்களின் நடவடிக்கைகள் காவல்துறையினரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்படி குற்றச் செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# பிப்.26-இல் வேலைநிறுத்தம்: டாஸ்மாக் பணியாளர்கள் முடிவு

**சென்னை, பிப்.02:** நாற்பது அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, பிப்.26-ஆம் தேதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு முடிவு செய்துள்ளது.

டாஸ்மாக் ஊழியர்களை பணி நிரந்தரம்; காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்; காலி மதுபுட்டிகளைத் திரும்பப் பெறும் திட்டத்தை தனி முகமை மூலம் அமல்படுத்த வேண்டும்; டாஸ்மாக் ஊழியர்களின் ஓய்வு வயதை 60-ஆக உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட 40 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பிப்.26-ஆம் தேதி ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட டாஸ்மாக் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

இதேபோல, பிப்ரவரி முதல் வாரத்தில் மாவட்ட அளவிலான வேலைநிறுத்த ஆயத்த மாநாட்டை நடத்துவது, பிப்.2-ஆவது வாரத்தில் மண்டல அளவிலான வேலைநிறுத்த மாநாட்டை நடத்துவது, இடைப்பட்ட காலத்தில் போராட்டத்துக்கு ஆதரவு கேட்டு அனைத்துக் கட்சித் தலைவர்களை சந்திப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# மாத தொடக்கத்தில் அதிர்ச்சி அளித்த சிலிண்டர் விலை



**சென்னை, பிப்.02:** சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்களை கருத்தில் கொண்டு எண்ணெய் நிறுவனங்களே சிலிண்டர் விலையை தீர்மானித்துக்கொள்ளலாம்என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனையடுத்து எண்ணெய் நிறுவனங்கள் சிலிண்டர் விலையை தீர்மானிக்கின்றன.

அந்த வகையில், பிப்ரவரி மாதத்திற்கான வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிகப் பயன்பாட்டு சிலிண்டரின் விலை 50 ரூபாய் உயர்ந்து ரூ.1,899-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் 110 ரூபாய் உயர்ந்த நிலையில் இம்மாதமும் வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வீட்டு உபயோகத்திற்கான 14 கிலோ எடை கொண்ட சமையல் சிலிண்டர் விலையில் எந்த மாற்றமுமின்றி ரூ.868.50-க்கு விற்பனையாகிறது.

# தூத்துக்குடி துறைமுகம் - உத்தரப் பிரதேச நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்!




**தூத்துக்குடி, பிப்.02:** தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓரியானா பவர் லிமிடெட்டுடன், நிலைத்த எரிசக்தி முன்னெடுப்புகளில் ஒத்துழைப்பு செய்யும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

ஜன. 27 முதல் 30 வரை கோவாவில் நடைபெற்ற இந்தியா எரிசக்தி வாரம்-2026 நிகழ்வில் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது. வ.உ.சி. துறைமுக ஆணையத் தலைவர் சுசாந்தகுமார் புரோஹித் முன்னிலையில், நிர்வாகப் பொறியாளர் எ. செந்தில் கணேஷ், ஓரியானா பவர் லிமிடெட் சார்பாக ஜிஹெச்2 வர்த்தகத் தலைவர் ஓம்காரநாத், இணை நிறுவனர் அனிருத் சரஸ்வத் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இந்த ஒப்பந்தம் கார்பன் பிடிப்பு, பயன்பாடு, சேமிப்பு முன்னோடித் திட்டம் அமைத்தல், துறைமுகம் அல்லது துறைமுகம் தொடர்புடைய இடங்களில் பசுமை மெத்தனால் உற்பத்தி நிலையம், அதனுடன் தொடர்புடைய கட்டமைப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்த முன்முயற்சி துறைமுகத்தின் கார்பன் நடுநிலைமை இலக்குகளை முன்னெடுக்கவும், பசுமை மெத்தனால் சேமிப்பு, வர்த்தக ஏற்றுமதிக்கான பசுமை ஹைட்ரஜன் கட்டமைப்புக்கான தயாரிப்பில் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

மேலும், வ.உ.சி. துறைமுக ஆணையம், தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் யுனிவாசல் கிளீன்டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது.

துறைமுகத்தில் திடக் கழிவு செயலாக்க நிலையத்தை உருவாக்குவது இதன் நோக்கமாகும். இதில், துறைமுக ஆணையத் தலைவர் முன்னிலையில், நிர்வாக பொறியாளர், யுனிவாசல் கிளீன்டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் பொது நிர்வாகி பினு மோகன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் சி. ப்ரியங்கா ஆகியோர் கையொப்பமிட்டனர்.

# "கொள்ளையடிப்பதில் தான் திமுகவுக்கும் அதிமுகவுக்கும் போட்டி" - சீமான் விமர்சனம்



**சென்னை, பிப்.02:** "யார் அதிகம் கொள்ளைடிப்பது என்பதிலும் வாக்குக்கு யார் அதிகம் காசு கொடுப்பது என்பதிலும் தான் திமுக அதிமுக இடையே போட்டி" என சீமான் விமர்சித்துள்ளார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தனியார் விடுதியில் நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை மாநில கலந்தாய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. சட்டப்பேரவை தேர்தலுக்கு தொகுதி வாரியாக வழக்கறிஞர்கள் குழு நியமிப்பது குறித்தும் தேர்தல் பணிகளை மேற்கொள்வது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

முன்னதாக கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆசிரியர்கள் போராடியதால் சம்பளம் பிடித்துள்ளனர். கேட்காமலேயே பெண்களுக்கு தேர்தலை கருத்தில் கொண்டு பணம் கொடுக்கின்றனர். ஒரு நாட்டின் எதிர்காலம் ஆசிரியர்களை நம்பி உள்ளது. ஆசிரியர்கள் தெருவில் நின்று போராடிக்கொண்டு இருக்கின்றனர். மாணவர்களின் நிலை என்னவாகும்? டாஸ்மாக் பணியாளர்கள் வீதியில் நின்று போராடினால் அரசு வேடிக்கை பார்க்குமா?

போக்குவரத்து துறை ரூ.1 லட்சம் கோடி கடனில் உள்ளது. கடனில் இருக்கும் போது இலவசப் பேருந்து பயணத்தை அறிவிப்பது ஏன்? கடன் வளர்ச்சியை நாட்டின் வளர்ச்சியாகக் கொண்டு ஆட்சி நடக்கிறது. இது ஒரு ஆட்சி, மீண்டும் ஒரு தேர்தல், அதில் நாங்கள் தான் வெல்வோம் என்று சொல்கிறார்கள். ரூ.6,500 கோடியை பொங்கலுக்காக அரசு செலவு செய்துள்ளது. இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ.58 கோடி தான் செலவாகும். திமுக-வுக்கு வாக்களித்த ஆசிரியர்கள் தான் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

திமுக-வுக்கும் அதிமுக-வுக்கும் தான் போட்டி என அதிமுக சொல்கிறது, அது அவர்களுக்குள் உள்ள சண்டை. யார் அதிகம் கொள்ளை அடிப்பது, யார் அதிகம் காசு கொடுப்பது என்பதில் அவர்களுக்குள் போட்டி. எம்ஜிஆர், ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரிடம் இருந்து கற்றுக் கொண்டதாக விஜய் சொல்லி இருக்கிறார், அது தம்பியின் தனிக்கருத்து. அவர்கள் கொள்கை தலைவர்களை எதற்காக வைத்துள்ளனர். எந்தத் தலைவரிடம் எந்த கருத்தை எடுத்துக்கொண்டோம் என தெளிவாகச் சொல்ல வேண்டும்.

முத்துராமலிங்கத் தேவர் மீதும், காமராஜர் மீதும் எனக்கு வருத்தம் உள்ளது. பகிரங்கமாக சொல்கிறேன். ஜின்னா தனி நாடு கேட்டது போல இங்கும் தனி நாடு கேட்டிருக்க வேண்டும். மாநில பட்டியலில் இருந்த கல்வியை பொதுப்பட்டியலுக்கு கொண்டு சென்றது காங்கிரஸ். அப்போது திமுக காங்கிரஸ் கூட்டணியில் தான் இருந்தது. கல்வியை மாநிலப் பட்டியலுக்கு வராமல் தடுத்தது காங்கிரஸ் தான். அவர்களைத்தான் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு கூட்டணி வைத்துள்ளனர்.

ஒரு ரூபாய்கூட கொடுக்காமல் வாக்குப் பெறுபவன் நான். ஓட்டுக்கு ஒரு ரூபாய் காசு கொடுக்காமல் தேர்தலை சந்திக்கத் தயாரா? ஓட்டுக்கு காசு கொடுக்காமல் தேர்தலை சந்திக்க இங்கு எந்த தலைவர்கள் உள்ளனர். வாக்குகளை பெறுவதற்காக கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுத்துள்ளனர். இதுதான் தேர்தல் அரசியல். கடந்தாண்டு பொங்கலுக்கு பரிசுத்தொகை கொடுக்கவில்லை ஆனால் இந்த ஆண்டு, ரூ. 3 ஆயிரம் கொடுத்துள்ளனர். இது தேர்தல் அரசியல். இவ்வாறு அவர் கூறினார்.

# வள்ளலர் தெய்வ நிலையத்துக்கு டன் கணக்கில் உணவுப் பொருள்களை வழங்கிய இஸ்லாமியர்!



**கடலூர், பிப்.02:** கடலூர் மாவட்டம், வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெறும் ஜோதி தரிசனப் பெருவிழாவையொட்டி, மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக 26-ஆவது ஆண்டாக அன்னதானத்துக்கு டன் கணக்கில் காய்கறிகள் மற்றும் உணவுப் பொருள்களை கடலூரரைச் சேர்ந்த இஸ்லாமியர் சனிக்கிழமை அனுப்பி வைத்தார்.

கடலூரரைச் சேர்ந்தவர் எஸ்.கே.பக்கீரான். இவர், கடலூர் மாவட்ட சிறுபான்மை மக்கள் நலக்குழு மாவட்டத் தலைவர், கடலூர் வணிகர் சங்க இணைச் செயலர், மார்க்சிஸ்ட் கட்சி மாவட்டக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் உள்ளார்.

வடலூரில் நடைபெறும் தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா அன்னதானத்துக்காக கடந்த 25 ஆண்டுகளாக அரிசி, பருப்பு மற்றும் காய்கறிகளை அனுப்பி வருகிறார். நிகழாண்டு தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழாவையொட்டி, 26-ஆவது ஆண்டாக 20 டன் காய்கறிகள், 7,000 தண்ணீர் புட்டிகள், 100 மூட்டை அரிசி, தலா 100 கிலோ துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, சேமியா உள்ளிட்ட மளிகைப் பொருள்களை 2 லாரிகள் மூலம் வடலூர் வள்ளலார் தாமசாலைக்கு அனுப்பிவைத்தார். கடந்த ஆண்டைவிட நிகழாண்டு இரண்டு மடங்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளார்.

கடலூரில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கடலூர் மாநகரத் தலைவர் ஜி.ஆர்.துரைராஜ் தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் மாவட்டச் செயலர் கோ.மாதவன், மக்கள் ஒற்றுமை மேடை மாவட்ட அமைப்பாளர் ஆர். அமர்நாத், சிஐடியு மாவட்டத் தலைவர் பி.கருப்பையன், தனியார் பேருந்து சங்கத் தலைவர் சதீஷ், யுவராஜ், வர்த்தக சங்கச் செயலர் சதீஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து எஸ்.கே.பக்கிரான்கூறுகையில், மதம், ஜாதிகளை கடந்து மனிதநேயம் காத்த வள்ளலாரை சிறுவயதில் இருந்தே எனக்கு பிடிக்கும். பசிப்பிணியை போக்கியவர் அவர். அந்த ஈடுபாடுடன் கடந்த 26 ஆண்டுகாலமாக மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்துக்கு என்னால் முடிந்த அளவுக்கு பொருள்களை அனுப்பி வருகிறேன். இந்துகள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் இங்கு சகோதரர்களாக வாழ்கிறோம். இந்த சகோதரத்துவத்தை வலியுறுத்தியும், மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தப் பணியை தொடர்ந்து செய்து வருகிறேன் என்றார்.

## அரசியல் கார்னர்

# "பாப்பாவையும் பாட்டியையும் போதை ஆசாமிகள் சீரழிக்கும் நிலை" - பழனிசாமி குற்றச்சாட்டு




**சென்னை, பிப்.02:** 6 வயது சிறுமி முதல் மூதாட்டிகள் வரை ரோட்டில் நடந்து செல்ல முடியவில்லை. போதை ஆசாமிகள் எந்த நேரம் இவர்களை சீரழிப்பார்கள், கொலை செய்வார்கள் என்று தெரியவில்லை என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை: உலக சரித்திரத்தில் ஹிட்லர், முசோலினி, நீரோ போன்ற சர்வாதிகாரிகளின் மொத்த உருவமாக, முதல்வர் மு.க.ஸ்டாலினை தமிழக மக்கள் பார்க்கின்றனர். கடந்த 56 மாத திமுக ஆட்சியில் காவல் துறையை தனது ஏவல் துறையாக, முதல்வர் ஸ்டாலின் மாற்றி வைத்துள்ளதால் சட்டம்-ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. 6 வயது சிறுமி முதல் மூதாட்டிகள் வரை ரோட்டில் நடந்து செல்ல முடியவில்லை. போதை ஆசாமிகள் எந்த நேரம் இவர்களை சீரழிப்பார்கள், கொலை செய்வார்கள் என்று தெரியவில்லை.

இந்நிலையில், திமுக ஆட்சி முடிவுக்கு வரும் நிலையில், 'ரோம் நகரம் பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தது போல்' மகளிர் மாநாடு நடத்துகிறார். 56 மாதங்களாக நிர்வாகத் திறனற்ற ஆட்சி செய்து, இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் முதன்மை மாநிலமாக தமிழகத்தை மாற்றிவிட்டு, நிதியே இல்லாமல் மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கோடிக்கணக்கான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

சென்னை தரமணியில் வெளிமாநில இளம்பெண், கணவன், 2 வயது குழந்தை அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். நந்தனம் கலைக்கல்லூரி கேன்டீனில் பணியாற்றிய அரியலூர் பெண், திமுக பிரமுகர் மற்றும் அவரது நண்பர்களால் சீரழிக்கப்பட்டுள்ளார். இந்த கொடுஞ்செயலில் ஈடுபடுபவர்களுக்கு போலீஸை கண்டு பயமில்லாத நிலை இருப்பதற்கு ஆட்சியாளர்களே காரணம்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு ஏதாவது ஒரு வகையில் ஆளும்கட்சியினர் அடைக்கலம் அளிப்பதுதான், தற்போது தமிழகம் குற்றவாளிகளின் கூடாரமாக மாறி உள்ளதற்குக் காரணம். பெருநகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை தடை இல்லாமல் போதைப் பொருட்கள் கிடைப்பதும், அவைகளை கொண்டு செல்வதில் ஆளும் கட்சியினரில் சிலர் ஈடுபட்டு வருவதும், பெரும் சீரழிவுக்கு காரணமாக உள்ளது. சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத முதல்வர் ஸ்டாலினை கண்டித்து வீதியில் இறங்கி நாள்தோறும் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதில், இரும்புக்கரம் கொண்டு அடக்கும் வேலையில்தான் திமுக அரசு ஈடுபட்டுள்ளது.

பல லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை கொள்ளையடித்து, தங்கள் பரம்பரையின் வாழ்வை மட்டுமே வளப்படுத்தும் நோக்கில், அல்லும் பகலும் செயல்படும் ஸ்டாலினின் கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டும் காலம் நெருங்கிவிட்டது. நம்மை கேள்வி கேட்க யாருமில்லை; நம்மை வெல்லும் சக்தி எங்குமில்லை என்ற மமதையோடு உள்ளார் முதல்வர் ஸ்டாலின். விரைவில் தேர்தலை தமிழகம் சந்திக்கும்; மக்கள் மாறுதலை தருவார்கள். திமுக கூட்டம் மூலைக்கு மூலை அடக்கி ஒடுக்கி வைக்கப்படும். தமிழக மக்கள் குறிப்பாக பெண்கள் சுதந்திரம் பெறுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் பிரச்சார சட்டப் பாதுகாப்புக் குழு அறிவித்தார் விஜய்




**சென்னை, பிப்.02:** பிரச்சார அனுமதி பெறுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக தவெக-வில் தேர்தல் பிரச்சார சட்டப்பாதுகாப்புக் குழுவை அக்கட்சியின் தலைவர் விஜய் நியமித்துள்ளார்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரச்சாரங்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பை உறுதி செய்யவும் பல்வேறு முக்கிய குழுக்களை தவெக நியமித்துள்ளது. அந்தவகையில், தற்போது தேர்தல் பிரச்சாரத்தின் போது காவல்துறையிடம் அனுமதி பெறுவது மற்றும் சட்டப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக, அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களை கொண்டு, சட்டப்பேரவை தேர்தல் பிரச்சார மாநில பாதுகாப்பு குழு ஒன்றை விஜய் நியமித்துள்ளார்.

அந்தக் குழுவில், கட்சியின் இணை பொதுச் செயலாளர் சி.டி. ஆர். நிர்மல் குமார், பொருளாளர் வெங்கட்ராமன், வழக்கறிஞர் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் அறிவழகன், சட்ட ஆலோசனைப் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் குமரேசன், இணை ஒருங்கிணைப்பாளர்கள் சிவசண்முகம், பாண்டியன், வழக்கறிஞர் பிரிவு இணை ஒருங்கிணைப்பாளர்கள் இந்திரா தன்ராஜ், சக்கரவர்த்தி, தேசிய செய்தி தொடர்பாளர் சத்யகுமார் உள்ளிட்ட 25 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர், கட்சியின் தேர்தல் களப்பணிகள் எந்தவித சட்டச் சிக்கல்களும் இன்றி சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் ஒரு முக்கியமான அரணாகச் செயல்படும். மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்காணித்தல், பிரச்சார அனுமதிகளை பெறுதல், பொய் வழக்குகள் மற்றும் சட்ட நெருக்கடிகளைத் தடுத்தல், வேட்பு மனுத் தாக்கல் மற்றும் சரிபார்த்தல், மாவட்ட அளவிலான வழக்கறிஞர் அணிகளை ஒருங்கிணைத்தல், சமூக ஊடகக் கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள இருக்கின்றனர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com